

பாடல் பெற்ற ஸ்தலங்கள்



கே. சாய் குமார்



ஸ்ரீவாஞ்சியம்
காசிக்குச் சமமான தலம்





திருவிற்குடி
அஷ்ட வீரட்டானத்தலம்



திருவேதிக்குடி
சப்த ஸ்தானங்களில் ஒன்று

வழிகாட்டி



தாளபுரீஸ்வரர்
திருக்கோலக்கா



கற்பகாம்பாள்
மயிலை



நடராஜர்



வேதபுரீசுவரர் -
பாலாம்பிகை தாயார்
திருவேற்காடு



எறும்பீசர்
திருவெறும்பூர்



சிவன்
திருக்கைலாயக் காட்சி



திரிலோக்ய சுந்தரம்
திரிலோக்கி



திருகள்ளீஸ்வரம் - திருகண்டலம்



ஸ்ரீ சிவசூரியப்பெருமாள்
ஸ்ரீ உஷாதேவி
பிரத்யுஷாதேவி





ஸ்ரீ புத்திரத் தியாகேசர் ஸ்ரீ கமலாம்பிகை
திருவாவடுதுறை



ஸ்ரீ பிரமபுரீஸ்வரர்
ஸ்ரீ திருநிலைநாயகி
சீர்காழி



ஸ்ரீ திருநிலைநாயகி
சீர்காழி



ஸ்ரீ ஏகாம்பரநாதர்
ஸ்ரீ ஏலவார் குழலி
காஞ்சிபுரம்




ஸ்ரீ சிஷ்டகுருநாதர் ஸ்ரீ சிவலோகநாயகி
திருத்துறையூர்



ஸ்ரீ பிராணநாதசுவாமி
ஸ்ரீ மங்களநாயகி
திருமங்கலக்குடி





தாம்பத்ய தக்ஷிணாமூர்த்தி ஸ்ரீ பள்ளிகொண்டீஸ்வர சுவாமி
சுருட்டப்பள்ளி

ஸ்ரீ [illegible]
தி[illegible]





ஸ்ரீ பொள்ளாப்பிள்ளையார்
ஸ்ரீ சௌந்தரேஸ்வரர் ஸ்ரீ திரிபுரசுந்தரி
திருநாரையூர்

ஸ்ரீகல்யாண சுந்தரர்
ஸ்ரீ கோகிலாம்பாள்
திருமணஞ்சேரி







ஸ்ரீ யாழ்முரிநாதர் ஸ்ரீ தேனாமிர்தவல்லி
தருமபுரம்

ஸ்ரீ திருமாகறலீஸ்வரர் ஸ்ரீ திருபுவனநாயகி
திருமாகறல்





ஸ்ரீ திருஞானசம்பந்தர்
ஸ்ரீ தோத்திரபூரணாம்பிகை
ஆச்சாள்புரம்

ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஸ்ரீ வாள்நெடுங்கண்ணியம்மை
ஸ்ரீ ஆயிரத்தொருவர் சுவாமி
ஆக்கூர்

சிவ சிவ

பாடல் பெற்ற ஸ்தலங்கள்

276 திருமுறைத்தலங்களின் பூரண வழிகாட்டி



பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி. - உமாபதி சிவம்



நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே

திருமூலர்

ஆசிரியர்

கே. சாய் குமார்

M.Sc, CAIIB, BA (Music),SDCA, Dip in Sans.
16/28, II Main Road,
Jai Nagar, Arumbakkam, Chennai 600 106.
Mobile : 93828 72358, 044-23637212
email: saikumarlalitha@yahoo.com
website: www.sivavishnutemplesguide.com
http://paadal-petra-sthalangal.blogger.com/

நூலின் பெயர்	:	**பாடல் பெற்ற ஸ்தலங்கள்**
ஆசிரியர் பெயர்	:	**கே. சாய் குமார்** M.Sc,CAIIB, BA (Music),SDCA,Dip in Sans
ஆறாம் பதிப்பு	:	நவம்பர் 2013
பக்கங்கள்	:	280
உரிமை	:	ஆசிரியர்க்கு
நூற்கட்டுமானம்	:	அட்டைக்கட்டு
அச்சிட்டோர்	:	ட்ரூ பிரிண்ட், மதுரை - 1.
விலை	:	ரூ. 120.00

தலங்களின் விவரம்

தலங்கள்	வரிசை எண்	எண்ணிக்கை
தொண்டை நாடு	1 - 32	32
நடு நாடு	33 - 54	22
சோழ நாடு		
காவிரி வடகரை	55 - 117	63
காவிரி தென்கரை	118 - 244	127
பாண்டி நாடு	245 - 258	14
கொங்கு நாடு	259 - 265	7
மலை நாடு	266	1
துளுவ நாடு	267	1
வட நாடு	268 - 272	5
ஈழ நாடு	273 - 274	2
புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டவை	275-276 (275 - காவிரி தென்கரை 276 - நடுநாடு)	2
	மொத்தம்	276
திருவிசைப்பா திருப்பல்லாண்டு தலங்கள்		10

இந்தப் புத்தகத்திற்காக அளிக்கப்படும் தொகை
திருக்கோயில்களின் வளர்ச்சிக்காக உபயோகப்படுத்தப்படும்.

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
23 - வது குருமகா சன்னிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்
திருவாவடுதுறை - 609 303,
நாகை மாவட்டம்.
தொ.பே. எண் 04364 - 232021.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன்தாள் வாழ்க

தாங்களும் தங்களது சுற்றத்தினரும் வாழ்வில் எல்லா நலன்களும் இனிதுறப்பெற்று நீடு வாழ தம் வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப் பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து சீர்வளர்சீர் குரு மகாசந்நிதானம் அவர்கள் வாழ்த்தி வழங்கியருளும் திருநீற்றுச் செல்வம் இத்துடன் எழுந்தருளி வருகின்றது.

அனைவரும் அணிந்து மகிழ்க

அன்புடையீர்

திருவருள் சிறக்க

வணக்கம்,

தாங்கள் திருவாவடுதுறை அருள்மிகு கோமுத்தீசுவரசுவாமி திருக்கோயிலுக்கு "பாடல்பெற்ற ஸ்தலங்கள் வழிகாட்டி" புத்தகம். – 2 அனுப்பி இருந்ததை சீர்வளர்சீர் குருமகா சந்நிதானம் அவர்கள் திருக்கண் சாற்றியருளினார்கள். தாங்கள் தெரிவித்து இருந்த கோரிக்கை கடிதத்தின் நகலை நமது ஆதீன திங்களிதழ் " மெய்கண்டார் ". 2007 ஜூலை இதழில் பிரசுரம் செய்யவும், ஆதீனத்திற்குச் சொந்தமான அனைத்து திருக்கோயில் விளம்பர பலகைகளிலும் ஒட்டி ஆன்மீக அன்பர்கள் பார்வைக்கு வைக்கவும் மகாசன்னிதானம் அவர்கள் திருவுள்ளம் கொண்டுள்ளார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்களது சிவப்பணி மேலும் சிறக்கவும் ஆதீனம் தங்களைப் பாராட்டி வாழ்த்துகிறது.

"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும் பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றுங்,
கரக்கோயில் கடி பொழில் சூழ்ஞாழற் கோயில் கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்,
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும் இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்,
திருக்கோயில் சிவனுறையுங்கோயில் சூழ்ந்து தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே."

– அப்பர் சுவாமிகள்.

/ அருளாணையின் வண்ணம் /

மேலாளர்
திருவாவடுதுறை ஆதீனம்

நாள் : 27.06.2007
இடம் : திருவாவடுதுறை
இணைப்பு : திருநீற்றுத் திருக்காப்பு

பெறுதல் : சிவத்திரு.கே.சாய்குமார், M.Sc., CAIIB, B.A (Music), SDCA, Dipin Sans,
16 / 28, இரண்டாவது மெயின்ரோடு,
ஜெய் நகர், அரும்பாக்கம்,
சென்னை – 600 106.

பொருளடக்கம்

உ

திருச்சிற்றம்பலம்

முன்னுரை

சிவமே செல்வம் சிவமே முக்தி

அன்புடையீர், ஜனவரி 15, 2007

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே - தாயுமானவர்

இறைவனின் எண்ணற்ற ஆற்றலை அறியும் வகையில் பல அற்புதங்கள் நடந்தேறிய திருத்தலங்களை கொண்டது பாரத நாடு. இறைவனைக் கண்ணாரக் காணக்கிடைக்கப்பெற்ற தலங்கள் இவை. நால்வர் எனப்போற்றப்படும் அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர் மற்றும் மாணிக்கவாசகர் பாடிய திருத்தலங்கள் பாடல் பெற்ற ஸ்தலங்களாக விளங்குகின்றன. பன்னிரு திருமுறை நூல்களும், திருப்புகழும், திருவருட்பாவும் இன்ன பிற நூல்களும் இந்த 276 தலங்களின் சிறப்பைப்பற்றி கூறுகின்றன.

வரலாற்று சிறப்புமிக்க பிரும்மாண்டமான பல கோயில்கள் பற்றிய பாதை மற்றும் இதர விவரங்கள் அறியாததாலும் பகுதிசார்ந்த கோயில்களே தரிசிக்க வசதியானவை என்ற எண்ணம் மேலோங்கிய காரணத்தினாலும் இவ்விடங்களை தரிசிக்கும் மக்கள் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. நூற்றாண்டுகள் கடந்து மீண்டும் மீண்டும் அடியார்கள் தரிசிப்பதால் ஏற்படும் வீரியம் கூடப்பெற்ற சிறப்பான இந்தக்கோயில்களை தரிசிப்பதால் அடியார்கள் பலன் அதிகம் கிடைக்கப்பெறுவர்.

புராதனக் கோயில்களை நாம் காக்கவில்லையென்றால் அடுத்த தலைமுறையினர் மேன்மை வாய்ந்த இக்கோயில்களை இழக்க நேரிடும். தரிசனம் செய்யும் அடியார்கள் எண்ணிக்கை இன்னும் பல மடங்கு உயர வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமும்கூட. சில கோயில்களில் இன்றும் ஒரு கால பூஜைதான் சாத்தியம் என அறியும்போது வருத்தமாகவே உள்ளது. இத்தலங்களை தொடர்ந்து தரிசிப்பதே காப்பதற்குச்சமம். இந்த திருத்தலங்களை தரிசிக்க திருக்கோயிலுக்கான பாதை நடை திறந்திருக்கும் நேரம் மற்றும் தொடர்பாளர் தொலைபேசி எண்கள், இந்த மூன்று விஷயங்களை சேகரித்துக்கொடுத்தால் எண்ணற்றோர் இக்கோயில்களை தரிசிக்க ஏதுவாக இருக்கும் என

முயற்சி எடுத்தோம். இறைவனை நிச்சயம் தரிசிக்க முடியும் என்ற நம்பிக்கைக்கு அச்சாரமாக இந்த புத்தகம் விளங்கும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை. மனிதனின் வாழ்நாளில் இக்கோயில்களை தரிசித்து, அறிந்து அனுபவிக்க வேண்டிய விசயங்கள் பல உள்ளன.

பொதுவாக கோயில்கள் காலை 6 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும் மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையும் திறந்திருக்கும். விசேஷ மற்றும் சிறப்பு நாட்களில், ப்ரதோஷம், இராகுகாலம், ஆகிய நேரங்களில் மாறுதலுக்குட்பட்டவை. இருப்பினும் இந்த 276 கோயில்களில் பல கிராமப்புறங்களிலும் ஊருக்கு உள்ளடங்கி இருப்பதாலும், வசதி வாய்ப்புகள் குறைவாக இருப்பதாலும் மேலே குறிப்பிட்ட முழு நேரமும் திறந்துவைத்திருக்க வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. அடியார்கள் ஆவலோடு தரிசிக்க வரும்போது நடை மூடப்பட்டிருப்பின் அவர்கள் அடையும் வருத்தம் அளவிடமுடியாதது. ஆதலால் அடியார்க்கும் அர்ச்சகர் மற்றும் பொறுப்பாளர்களுக்கும் இந்தப்புத்தகம் ஓர் பாலமாக அமையும் என நம்புகிறோம். எனவே இதில் குறிப்பிட்டிருக்கும் நடை நேரத்தை கருத்தில் கொண்டு, தொடர்பு கொண்டு தரிசிக்க திட்டமிட உதவியாக இருக்கும்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பாளர் மற்றும் அர்ச்சகர் பெயர்கள் மற்றும் தொலைபேசி-மொபைல் எண்கள் திருக்கோயிலை தரிசிக்க உதவியாக குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர வேறு எந்த வகையிலும் தவறாகப் பயன்படுத்தக்கூடாதென வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம். யாருடைய பெயரேனும் குறிப்பிடப்படாமல் விட்டுப்போயிருந்தாலோ வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல எனத்தெரிவித்துக் கொள்கிறோம். சில கோயில்கள் இன்றும் தொலைபேசி தொடர்பு இல்லாத நிலையில் உள்ளன. அது போன்ற கோயில்களை தரிசிக்க விரும்புவோர் கடிதத் தொடர்பு கொள்ள ஏதுவாக முழு முகவரி கொடுக்கப்பட்டுள்ளது. வரைபடங்களும் பகுதிவாரியாக (உதாரணமாக சீர்காழியைச் சுற்றியுள்ள தலங்கள், மாயவரம் சுற்றியுள்ள தலங்கள் என) கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த வெளயீட்டின் முயற்சிக்கும் கடிதப்போக்குவரத்திற்கும் உறுதுணையாக இருந்த இந்தியத் தபால் துறையினருக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டு இருக்கிறோம். மெச்சுதற்குரியது அவர்களது சேவை. மேலும் எங்களது கடிதத்திற்கு துரிதமாக பதிலளித்த தொடர்பாளர்களின் ஒத்துழைப்பே விரைவாக இப்புத்தகம் வெளியிடுவதற்கு மூல காரணம். இதில் குறிப்பிடப்பட்டிருக்கும்

செய்திகளில் அல்லது தொடர்பு எண்களில் ஏதேனும் மாற்றம் இருப்பின் புத்தகம் பெற்றவுடன் எங்களது முகவரிக்குத் தெரியப்படுத்தவும். ப்ரதிகள் தேவைப்படுபவர்களும் எங்களோடு தொடர்பு கொள்ளவும்.

அன்பர்களின் பயனுக்காகவும் விழிப்புணர்ச்சிக்காகவும் வெளியிடப்பட்டிருக்கும் இந்தப்புத்தகத்தின் வெளியீட்டுப் பயன் உணர்ந்து நன்கொடை ஏதேனும் அளிக்கவிரும்புபவர்கள் தாராளமாக முன்வரலாம். அவ்வாறு கிடைக்கும் நன்கொடை யாவும் திருக்கோயில்களின் வளர்ச்சிக்காகவும் மேலும் கூடுதல் ப்ரதிகள் அச்சிட்டு வெளியிடுவதற்கும் பயன்படுத்தப்படும் என்பது திண்ணம்.

தலங்களின் விவரம் முதல் பத்தியில் பாடல் பெற்ற தலத்தின் புராதனப் பெயர், தற்போது நிலவி வரும் பெயர்(சாய்வெழுத்தில்) கோயிலின் பெயர் மற்றும் முகவரி கொடுக்கப்பட்டுள்ளது. உதாரணம் வரிசை எண் 81ல் திருக்கருப்பறியாலூர் - புராதனப் பெயர், *மேலைக்காழி தலைஞாயிறு* தற்போது நிலவி வரும் பெயர்கள். குற்றம் பொறுத்த நாதர் திருக்கோயில் கோயிலின் பெயர், கடைசி பத்தியில் சுவாமி அம்பாள் பெயர் மற்றும் தொடர்பாளரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த புத்தக வெளியீட்டின் தகவல் சேகரிப்பில் கடிதப்போக்குவரத்தில் உறுதுணையாக இருந்த திருவாளர்கள் வி.ராமச்சந்திரன், வி.பாலசுப்ரமணி, என். சந்திரசேகரன், சுகுணாரமேஷ் ஏ.சங்கரன், டி. வளர்மதி, உஷாராணி ரவிச்சந்திரன், எஸ். பாஸ்கர், ஆர். கண்ணன், எம்.கே. பார்த்தசாரதி, கீதா ரமேஷ், சீதா விஸ்வநாதன், ஆர். சுந்தரராஜன், ஆர். கௌசல்யா, கே. லலிதா அவர்களுக்கும் மற்றும் அச்சுப்பிழைத்திருத்தம் செய்த வி.ராமச்சந்திரன், கே. லலிதா அவர்களுக்கும், வரைபடம் தயாரிப்பில் துணையாக இருந்த மாஸ்டர் எஸ். கார்த்திக் ஷிவா அவர்களுக்கும், இந்தப்புத்தகம் அச்சேறுவதற்கு முக்கிய காரணமாய் இருந்த ஆர்.ரவிகுமார் அவர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும், ஒருங்கிணைப்பாளருக்கும் ஏனைய முறையில் ஊக்குவித்தவர்களுக்கும் எண்ணப்படி அச்சடித்து கொடுத்த ட்ரு ப்ரிண்ட் நிறுவனத்தினருக்கும் நன்றி. நான்காம் மற்றும் ஐந்தாம் பதிப்பிற்கு தக்க ஆலோசனைகள் கூறி உதவிய திரு கே. இராமகிருஷ்ணன், குத்தாலம்(மாயவரம்) மற்றும் திரு. கே.எம். சுப்பிரமணியன் காஞ்சிபுரம் அவர்களுக்கு அடியேனின் நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

சிவனருளால்

அன்பன் கே. சாய் குமார்.


எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
1	திருக்கச்சி ஏகம்பம் ஏகாம்பரநாதர் திருக்கோயில் காஞ்சிபுரம் காஞ்சிபுரம் மாவட்டம் - 631502	சென்னை காஞ்சி பேருந்து தடம் செங்கற்பட்டு -அரக்கோணம் இருப்புப்பாதை
2	திருக்கச்சி மேற்றளி திருமேற்றளீசுவரர் திருக்கோயில் திருமேற்றளித் தெரு பிள்ளையார்பாளையம் - 631501	பிள்ளையார்பாளையம் காஞ்சி அருகே ஞானசம்பந்தர் மற்றும் உற்றுக்கேட்ட முத்தீசர் ஆலயம் உள்ளது
3	ஓணகாந்தன் தளி ஓணகாந்தன் ஓணேஸ்வரர் திருக்கோயில் பஞ்சுப்பேட்டை பெரிய காஞ்சிபுரம் காஞ்சிபுரம் மாவட்டம் - 631502	காஞ்சிபுரம்-அரக்கோணம் பேருந்து பாதை சர்வதீர்த்தம் பிறகு பஞ்சுபேட்டை துணைமின் நிலயம் வலப்புறம் பிரியும் பாதை
4	கச்சி அநேகதங்காவதம் அநேகதங்காவதீஸ்வரர் திருக்கோயில் பிள்ளையார்பாளையம் காஞ்சிபுரம் மாவட்டம் - 631501	காஞ்சி பேருந்து நிலையம் -புத்தேரி தெரு வழி கயிலாயநாதர் கோயில் செல்லும் வழி
5	கச்சி நெறிக்காரைக்காடு திருக்காலிமேடு கச்சிநெறிக்காரைக்காட்டீஸ்வரர் திருக்காலீஸ்வரர் திருக்கோயில் திருக்காலிமேடு - காஞ்சிபுரம் காஞ்சிபுரம் மாவட்டம்-631501	ரெயில்வே ரோடு வழி தலைமை அஞ்சல் நிலையத்திற்கு எதிரில்

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
ஏகம் ஆம்ரம் - ஒரு மாமரம் - கீழ் இறைவன். வேதமே மாமரம். சுமார் 3600 ஆண்டுகள் பழையது. உமா தேவி மணலால் (ப்ருத்வீ) லிங்கம் செய்து வெள்ளம் வரும் போது தழுவிக் காத்தாள். வளைத்தழும்பும் முலைச் சுவடும் உண்டு. வேதத்தின் நான்கு வகைகளே நான்கு கிளைகள். இவ்வாறு வெள்ளம் வரச் செய்தது இறைவன் திருவிளையாடலே. முக்தி தலம்.	ஏலவார்குழலி உடனுறை ஏகாம்பரநாதர் 06.00 - 12.30 04.00 - 08.30 நிர்வாகஅதிகாரி 044 - 27222084
திருமால் தவமிருந்து சிவ சாரூபம் பெற்ற தலம். கீழக் கோடியில் ஞானசம்பந்தர் ஆலயம். ஞான சம்பந்தர் பாடிய பாடலை இறைவன் அமர்ந்து கேட்டதால் உற்றுக்கேட்ட முத்தீசர் ஆலயம் இடப்பால். ஞானசம்பந்தர் பதிகம் பாடும்போதே திருமாலுக்கு சிவ சாரூபம் கிட்டியது. 108 ருத்திரர்கள் பூஜித்த தலம்.	திருமேற்றளி நாயகி உடனுறை திருமேற்றளி நாதர் 08.00-12.00 05.00 - 09.00 ஜெ சந்திரமௌலி - அர்ச்சகர் 99945 85006 98653 55572
வாணாசுரனுடைய சேனாதிபதிகளான ஓணன்-காந்தன் வழிபட்ட தலம். அடிமைத் திறம் பாடி சுந்தரர் பொன் பெற்ற கோயில். இறைவன் புளியமரத்தில் ஒளிந்து கொள்ளவே சுந்தரர் அங்கும் சென்று பாட காய்களை பொன் காய் களாக விழச் செய்கிறார் இறைவன். சலந்திரன் வழிபட்ட தலம்.	ஓணேஸ்வரர் மற்றும் காந்தேஸ்வரர் மாலை 4.00 முதல் இரவு 10 மணி வரை. பிரதோஷ நாளில் முழுவதும் பூசாரி வீடு அருகில் உள்ளது 9364330011, 9381888737 98944 43108
அநேகதம் - யானை முகத்துடைய விநாயகர் இறைவனை நிறுவ, வழிபட்ட தலம். சுந்தரர் பாடல் பெற்றது. காஞ்சி 5 தலங்களுள் ஒன்று. குபேரன் வழிபட்ட தலம்.	அனேகதங்காவதேஸ்வரர் 08.30 - 11.30 வரை (காலையில் மட்டும்) ராஜப்பா, ரமேஷ். (45/121, ஏகாம்பரநாதர் கோயில் சன்னிதி தெரு, காஞ்சி) 044-27223948,27222084
இந்திரனும் புதனும் வழிபட்ட தலம். சுயம்பு லிங்கம் உயர்ந்த பாணம். ஞான சம்பந்தர் காஞ்சிக்கு வரும் வழியில் காரை (முட்) செடிகளாக அமைந்திருந்தது. வேப்ப மரங்கள் அடர்ந்திருப்பதால் வேப்பங்குளம் என்ற பெயரும் உண்டு. பாணம் செம்மன் நிறம்.	பிரமராம்பிகை உடனுறை சத்திய நாதேஸ்வரர் காலை 6 மணி முதல் மாலை 6 வரை ரமேஷ் 9715170451 மெய்க்காவல் உள்ளனர்

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
6	குரங்கணில்முட்டம் வாலீஸ்வரர் திருக்கோயில் குரங்கணில்முட்டம் கிராமம் வழி மாமண்டூர் தூசி அஞ்சல் - செய்யாறு வட்டம் திருவண்ணாமலை மாவட்டம்- 631702	காஞ்சி வந்தவாசி பேருந்துப் பாதையில் பாலாறு தாண்டி தூசி கிராமத்திலிருந்து கிழக்கு நோக்கி 2 கி மீ.
7	மாகறல் மாகறலீஸ்வரர் திருக்கோயில் மாகறல் கிராமம் அஞ்சல் வழி காஞ்சிபுரம் - காஞ்சி மாவட்டம் உத்திரமேரூர் வட்டம் -631603	காஞ்சிபுரம் உத்திரமேரூர் பாதை (வழி ஒரிக்கை) பேருந்து செல்லும். செய்யாற்றின் கரையில் உள்ளது அருகே இளையனார் வேலூர் முருகன் தலம் உள்ளது.
8	திருவோத்தூர் திருவத்திபுரம்,திருவத்தூர் வேதபுரீஸ்வரர் திருக்கோயில் திருவத்திபுரம் செய்யாறு வட்டம் திருவண்ணாமலை மாவட்டம் - 604407	செய்யாறு பேருந்து நிலையம் அடைந்து திருவத்திபுரம் ஊரில் கோயில்.
9	வன்பார்த்தான் பனங்காட்டூர் திருப்பனங்காடு தாலபுரீஸ்வரர் கிருபாநாதர் திருக்கோயில் திருப்பனங்காடு-போஸ்ட் வழி வெம்பாக்கம் செய்யாறு வட்டம் திருவண்ணாமலை மாவட்டம் - 604410	காஞ்சி கலவை பெருங்கட்டூர் பேருந்து சாலையில் கூட்டு ரோடில் திருப்பனங்காடு வழியில் செல்ல வேண்டும்.

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
வாலி, இந்திரன், எமன் குரங்கு, அணில், காக்கையாக வழிபட்டு வினை நீங்கப் பெற்ற ஸ்தலம். அருகில் 100 மீட்டர் தூரத்தில் தொல்பொருள் சிற்பங்கள் இருக்கின்றது. யமன் பூஜித்த தலம். ஆதலால் யம பயம் இல்லை. சனி ப்ரீத்தி செய்யக்கூடிய தலம்.	இறையார் வளையம்மை உடனுறை ஸ்ரீவாலீஸ்வரர் 06.00 - 09.00 04.00 - 07.00 கே.எம் .ஸ்ரீதர் குருக்கள் 044 - 27242409 9025557252
இந்திரன் வழிபட்டது. இராசேந்திர சோழனுக்கு இறைவன் பொன் உடும்பாக தோன்றி அவன் துரத்த புற்றில் ஒளிந்து சிவலிங்கமாக காட்சி கொடுத்த தலம். உடும்பு போன்ற சிறிய திருமேனி. கஜ ப்ருஷ்ட அமைப்பில் ஆலயம். வினை நீக்கும் பதிகம் சம்பந்தருடையது சிறப்புடையது. யானை மீது முருகன் அமர்ந்த அபூர்வ திருமேனி. திங்கட்கிழமை தரிசனம் விசேஷம். 80 வயது நிரம்பியவர் எலும்பு முறிவு உபாதையிலிருந்து அருளப்பெற்றத் தலம்.	திரிபுவனநாயகி உடனுறை திருமாகறலீஸ்வரர் 07.30 - 12.00 06.00 - 8.00 நிர்வாகி செயல் அலுவலர் 044 - 27240294 (தொலைபேசி காலை7-9 அல்லது மாலை 6-8 தொடர்பு கொள்ளவும்) சண்முகசுந்தர குருக்கள் 9444810396
தொண்டைமான் சிற்றரசனுக்கு படைகளை நகர்த்திய கிழக்கு நோக்கிய நந்தி. சமணர் கொட்டம் அடக்க - சம்பந்தர் ஆண் பனைகளை குலையீனச் செய்தது. புனல் மற்றும் அனல் வாதம் நிகழ்த்தியது. ராகு கேது பரிகார தலம். மகா மண்டபத்தில் கல்லினால் செதுக்கிய பனை மரம் பூ காய் தனித்தனியே. மகா மண்டபத்தில் நடுவில் நின்றால் ஒரே நேரத்தில் அனைவரையும் தரிசிக்கலாம்.	பாலகுஜாம்பிகை உடனுறை வேதபுரீஸ்வரர் 06.00 - 12.00 04.00 - 08.30 கந்தசுவாமி குருக்கள் 9443345793 04182 - 224387
பனையை பாடல் பெற்ற தலமாக பெற்ற 5 தலங்களுள் ஒன்று. அகத்தியர் பூஜித்த போது இறைவன் சடையிலிருந்து வந்த கங்கை சடாகங்கை. கங்காதேவி சிலை உள்ளது. புலஸ்தியர் மற்றும் கண்வ முனிவர் வழிபட்ட தலம். இறைவன் சுந்தரருக்கு இங்கு அமுது படைத்ததாகவும் ஊற்று தீர்த்தம் பாதத்தால் கிளரித் தந்ததாகவும் கதை.	அமிர்தவல்லி உடனுறை தாலபுரீஸ்வரர் மற்றும் கிருபாநாயகி உடனுறை கிருபா நாதேஸ்வரர் 07.00 - 12.00 05.00 - 08.00 என். தேவராஜ சர்மா அர்ச்சகர்

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
10	திருவல்லம் திருவலம் வில்வநாதீஸ்வரர் திருக்கோயில் திருவலம் அஞ்சல்-வழி ராணிப்பேட்டை குடியாத்தம் வட்டம் வேலூர் மாவட்டம் - 632515	ஆற்காடு ராணிப்பேட்டை காட்பாடி சாலைவழி. ராணிப்பேட்டை முத்துக்கடை அடைந்து பெங்களூர் சித்தூர் சாலை சிப்காட் தாண்டி இரும்பு பிரிட்ஜ் கடந்தால் திருவலம். வேலூரிலிருந்து 20 கிமீ தூரத்திலும், காட்பாடி ரயில் நிலையத்திலிருந்து இருந்து 9 கிமீ லும் உள்ளது. ராணிப்பேட்டை முத்துக்கடையில் இருந்து நகரப் பேருந்துகள் உள்ளன. வேலூரில் ஜலகண்டேஸ்வரர் கோயில் பிரசித்தம்.



தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
	04182 - 201411 9843568742
இறைவன் இன்றைய பொன்னை ஆற்றை நீ வா என அழைக்க அது நிவா என மாறியதாம். வில்வகாட்டில் பாம்பு புற்றில் சுயம்புவாக சிவலிங்கம் இருக்க பசு ஒன்று நாள்தோறும் பாலைச் சொரிந்து சிவலிங்கம் வெளிப்பட்டது. உக்கிர வடிவில் உள்ள தீக்காலி அம்பாளை ஆதி சங்கரர் சாந்தப்படுத்தினார். கௌரி, விஷ்ணு, சனக முனி வழிபட்டது. நாரதர் கொண்டு வந்த ஞானப்பழத்தைப் பெற அம்மையப்பனை வலம் வந்து, உலகம் தான் அம்மையப்பன், அம்மையப்பன் தான் உலகம் என உணர்த்தினார். இத்தலத்தில் வில்வநாதரைப் பார்த்தபடி தும்பிக்கையில் ஞானப்பழத்துடன் விநாயகர் திகழ்கிறார். சிவனையும் பார்வதியினையும் வலம் வந்ததால் திருத்தலப் பெயர் திருவலம் ஆகும். கைலாயம் போலவே அனைத்து சந்நிதிகளும் வில்வநாதரைப் பார்த்தவாறு உள்ளன. தனுமத்யாம்பாளும் அவ்வாறே உள்ளார். காசிக்கு நிகரான தலம். நவக்கிரகங்கள் வழிபட்ட தலமாதலால் ஈசனை வழிபட நவகோள்களை வழிபட்ட பலன் கிட்டும். கோயில் கோபுரத்தைச் சுற்றி 27 நட்சத்திரங்களையும் சிலையாக வடித்துள்ளனர். எனவே அனைத்து நட்சத்திரக்காரர்களுக்கும் பலன் தரும் பதி இது. தக்கன் வேள்வியை அழிக்க ருத்ர அவதாரமாக சிவனுள்ளிலிருந்து வெளிப்பட்ட வீரபத்திரர் அவனையும் வேள்வியினையும் அழித்தார். தக்கன் அமைத்த யாக சாலை உள்ளது. திருவலத்திலிருந்து 3 கிமீ தொலைவில் கஞ்சனகிரி என்கிற மலை உள்ளது. அங்கு விளங்கிய கஞ்சன் என்கிற அசுரன் அர்ச்சகர் பூஜைக்கு நீர்க் கொணர வரும் போது இடையூறுகள் செய்யவே பெருமானை அவர் வேண்டிக் கேட்டுக்கொள்ள, சிவன் நந்தியம் பெருமானுக்குக் கட்டளையிட்டார். அவர் தன் கொம்புகளால் அவனை குத்தித் தூக்கி எறிந்தார்.	தனுமத்யாம்பாள் உடனுறை வில்வநாதீஸ்வரர் 06.00 - 12.00 04.00 - 08.00 கந்தசுவாமி குருக்கள் 0416- 2236491 9360040807 சுகானந்தம் 9443099516

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி

க்ஷேத்திரக்கோவை

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
11	திருமாற்பேறு திருமால்பூர் மணிகண்டேஸ்வரர் திருக்கோயில் திருமால்பூர் அஞ்சல் அரக்கோணம் வழி அரக்கோணம் வட்டம் வேலூர் மாவட்டம் - 631053	அரக்கோணம் காஞ்சி இருப்புப்பாதையில் உள்ள இருப்புப்பாதைக்கு மேற்கே 5 கி. மீ சென்றால் ஊர்
12	திருவூறல் தக்கோலம் ஜலநாதேஸ்வரர் திருக்கோயில் தக்கோலம் அஞ்சல் அரக்கோணம் வட்டம் வேலூர் மாவட்டம் - 631151	சென்னை காஞ்சி பேருந்து தடம் காஞ்சியிலிருந்து 30 கி. மீ இருப்புப் பாதை நிலையம். ஊர் அருகே கல்லாறு

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
சிவனை அவன் வேண்ட அவனுக்கு முக்தியும் அளித்தார். அவனது பாகங்கள் விழுந்த பெயரிலேயே இன்றும் ஊர்கள் அருகே உள்ளன. இதனாலேயே இங்குள்ள நந்தி சிவபெருமானுக்கு தன் முதுகைக்காட்டியபடி உள்ளது. கோயில் தூண் ஒன்றில் இந்த வரலாறு சித்தரிக்கப்பட்டுள்ளது. கோயிலின் முகப்பில் நந்தி இருக்கும் இடத்தில் கவிழ்த்து வைத்த திருவோட்டு அடையாளம் தாங்கிய மேடை உள்ளது. சித்த மூர்த்திகள் வாசஸ்தலமாக இது திகழ்கிறது. சுவாமி சந்நிதிக்கு வலப்புறம் தொட்டி அமைப்பில் உள்ள ஆலயத்தில் மழை வேண்டி பிரார்த்திக்க ஜலகண்டேஸ்வரர் எனும் பாடலீஸ்வரர் எழுந்தருளுகிறார்.	
திருமால் இறைவனை ஆயிரம் தாமரை கொண்டு வழிபட்டு ஒரு நாள் ஒரு தாமரை குறைய தன் கண்ணையே பறித்து மலராக இட்டு சக்ராயுதம் திரும்பப்பெற்ற தலம். உற்சவர் ஒரு கையில் தாமரையோடும் மறு கையில் கண்ணோடும். சந்திரன் வழிபட்டது. திருமால் பேறு பெற்றதால் இப்பெயர்.	அஞ்சனாட்சி உடனுறை மணிகண்டேஸ்வரர் 07.00 - 12.00 05.00 - 08.30 சத்யோஜாத சிவம் தி. ந. சம்பு சிவாச்சாரியார் 04177-293470, 9965367272.
அபூர்வ திருக்கோல தட்சிணாமூர்த்தி. மூன்றாவது குரு ஸ்தலம். குரு பரிகார தலம். ஆறு மாதம் செந்நிறம் - தட்சிணாயனத்தில். உத்திராயணத்தில் வெண்ணிறம்.	கிரிராஜகன்னிகை உடனுறை ஜலநாதேஸ்வரர் 08.00 - 12.00 04.30 - 08.00 கே. சம்பந்தமூர்த்தி சிவாச்சாரியார் மற்றும் கே. பாபு சிவாச்சாரியார் 04177 - 246427,

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
13	இலம்பையங்கோட்டூர் எலுமியன், ரம்பையன் கோட்டூர் அரம்பேஸ்வரர் திருக்கோயில் இலம்பயங் கோட்டூர் (எலுமியன்கோட்டூர்) கப்பாங்கோட்டூர் அஞ்சல் (வழி எடையார்பாக்கம்) ஸ்ரீபெரும்புதூர் வட்டம் காஞ்சி மாவட்டம் - 631553	கூவம் ஏரியில் இறங்கி 3 கி மீ ஆற்றின் மறு கரை அல்லது சென்னை காஞ்சி செல்லம்பட்டிடை பேருந்து வழி. செல்லம்பட்டிடை இறங்கி 1 கி.மீ. கூவம் அருகில் உள்ள பேரம்பாக்கத்திலிருந்து 4 கி.மீ. நரசிங்கபுரம் 1 கி.மீ. அங்கிருந்து 3 கி.மீ.
14	திருவிற்கோலம் கூவம் திரிபுராந்தேஸ்வரர் திருக்கோயில் கூவம் கிராமம் கடம்பத்தூர் அஞ்சல் திருவள்ளூர் வழி திருவள்ளூர் மாவட்டம் -631203	சுங்குவார்சத்திரம் வந்து பேரம்பாக்கம் வழியாக திருவள்ளூர் கிளைச்சாலையில் கூவம் கூட் ரோடில் 1 கி. மீ வலப்புறமாக ஊர். ஸ்ரீபெரும்புதூர் ஆதிகேசவப் பெருமாள் கோயிலை தரிசிக்கலாம். வழியில் திருமழிசை ஜகந்நாத பெருமாள் கோயில் மற்றும் ஒத்தாண்டேஸ்வரர்கோயில் உள்ளது
15	திருவாலங்காடு வடாரண்யேஸ்வரர் திருக்கோயில் திருவாலங்காடு அஞ்சல் அரக்கோணம் திருத்தணி வட்டம் திருவள்ளூர் மாவட்டம் - 631210	சென்னை திருவள்ளூர் அரக்கோணம் பேருந்து பாதை. ரத்தினசபை.
16	திருப்பாசூர் திருப்பாச்சூர் வாசீஸ்வரர் திருக்கோயில்	சென்னை திருத்தணி பேருந்து வழி கடம்பத்தூர் சாலை பிரியுமிடத்தில்

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
	93616 22427 99947 86919
ஆறு கால பூஜை. ஞான சம்பந்தர் இப்பகுதிக்கு வரும்போது, பிள்ளையாக, முதியவராக பின் பசுவாக வந்து அவரது சிவியை முட்ட வழிகாட்டி இறைவன் மறைகிறார். அப்போது தான்அவருக்கு இத்தலம் தெரிகிறது. அரம்பை முதலானோர் வழிபட்டது. தட்சிணாமூர்த்தி சின்முத்திரையை இதயத்தில் வைத்துள்ளார். நரசிங்கபுரத்தில் சமீபத்தில் 17-6-2007 திருப்பணி செய்யப்பட்டுள்ள 1200 வருட கோயில்.	கனககுஜாம்பிகை உடனுறை அரம்பேஸ்வரர் காலை 06.00 முதல் இரவு 08.00 வரை கே.எம் டி பிரம்மேசசிவம் 9600043000 044 -27692104 044- 27692412 94448 65714 ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் கோயில், பேரம்பாக்கம் 631402 (7.30-12.00 4.30-8.00), போன் - 94425 85638
குளத்தில் நீராடுவோர்க்கு புத்திரப்பேறு. அதிக மழை வெள்ளம் வரும் அறிகுறி இருந்தால் சுவாமி மீது வெண்மை படரும் எனவும் போர்நிகழ்வதாயின் செம்மை படரும் எனவும் சம்பந்தர் பாடலில் சொல்கிறார். அபிஷேக நீர், பால் மற்றும் அன்னம் இவைகள் சிரத்தையாக கொண்டு வரப்படுகிறது.	திரிபுராந்தகி உடனுறை திரிபுராந்தகேஸ்வரர் 06.00 - 11.00 04.00 - 07.30 என் சம்மந்த குருக்கள் மற்றும் சுந்தரமூர்த்தி குருக்கள் 9841894804 044 - 27651084, 94446 07369
பஞ்ச நடனத்தில் ஊர்த்துவ தாண்டவ தலம். நால்வர், காரைக்காலர், பட்டினத்தார் அருணகிரியார், இராமலிங்க அடிகளார், கச்சியப சிவாச்சாரியார், பாம்பன் சுவாமிகள் பாடிய தலம். காரைக்கால் அம்மையாரின் முக்தி தலம். நடனத்தால் நாணிய காளியின் நடனத்தை பாராட்டி உன்னை தரிசித்த பிறகு என்னை தரிசிப்பவருக்கு முழு பலன் என்றார்.	பிரம்மராளகாம்பாள் உடனுறை வடாரண்யேசுவரர் காலை 6 மணி முதல் இரவு 8 வரை சு. சபாரத்ன குருக்கள் 9940736579 9791593564 044 - 27872443 , 94440 39290
வேடர்கள் புற்றில் பால்சொரியும் பசுவை மூங்கிற்காட்டில் பார்த்து வெட்டிப் பார்க்க	பசுபதிநாயகி உடனுறை பசுபதீஸ்வரர்

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
	திருப்பாசூர் கிராமம் கடம்பத்தூர் அஞ்சல் திருவள்ளூர் வழி திருவள்ளூர் மாவட்டம் - 631203	முதலில் ஊர் அல்லது சென்னை திருவாலங்காடு வழியாக அரக்கோணம் பாதையில். திருவள்ளூர் பேரம்பாக்கம் பேருந்துகள் செல்லும்.
17	திருவெண்பாக்கம் பூண்டி நீர்த்தேக்கம் ஊன்றீஸ்வரர் திருக்கோயில் பூண்டி நீர்த்தேக்கம் அஞ்சல் திருவள்ளூர் வழி திருவள்ளூர் மாவட்டம் - 602023	பழைய கோயில் திருவிளம் பூதூரில் பூண்டி நீர்த்தேக்கம் அணைப்பகுதி திருவள்ளுவர் சாலையில் கோயில். திருவள்ளூரிலிருந்து டி-41, டி-52 பூண்டி பேருந்து நிலையத்தில் இறங்கவும். ஊத்துக்கோட்டை பேருந்தில் நெய்வேலி கூட்டு ரோடில் இருந்து ஷேர் ஆட்டோவில் 2 கி.மீ தூரம்.
18	திருக்கள்ளில் திருக்கள்ளம், திருக்கண்டலம் சிவானந்தேஸ்வரர் திருக்கோயில் திருக்கண்டலம் அஞ்சல் வழி வெங்கல் எஸ்.ஓ. திருவள்ளூர் வட்டம் மற்றும் மாவட்டம் - 601103	சென்னை பெரியபாளையம் வழிகன்னிகைப்பேர் (கன்னிப்புத்தூர்) அடைந்து 4 கி.மீ அல்லது தாமரைப்பாக்கம் கூட் ரோடு வழி வெங்கல் அடைந்து 10 கி மீ. வெங்கலிலிருந்து வரும் போது பெருமுடிவாக்கம், தண்டுமேடு, கிளாம்பாக்கம், அத்தங்கி காவலூர் வழி. திருவள்ளூரிலிருந்து வரும் போது இந்த வழி.
19	திருக்காளத்தி ஸ்ரீ காளஹஸ்தி காளஹஸ்தீஸ்வரர் திருக்கோயில் காளஹஸ்தி அஞ்சல் சித்தூர் மாவட்டம் ஆந்திர மாநிலம்-517644	ரேணிகுண்டா கூடூர் ரயில் பாதை திருப்பதியிலிருந்து 40 கி மீ சென்னையிலிருந்து 110 கி மீ சென்னை - கும்மிடிபூண்டி நெடுஞ்சாலையில் பொன்னேரி தாண்டியவுடன் இடப்புறம் பிரியும் சாலையில் 45 கி.மீல் ஊர். இரயில்நிலையத்திலிருந்து 2 கி.மீ

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
இறைவன் வெளிப்பட்டார். காளியின் துணை கொண்ட குறுநில மன்னனை கரிகாலன் வெல்ல முடியாததால் இறைவனை வேண்ட போரில் நந்தி காளிக்கு விலங்கு பூட்டி அடைத்தார். மன்னன் வெற்றிக்கு கட்டிய கோயில். அம்பாள், திருமால், சந்திரன் வழிபட்டது. தீண்டாத் திருமேனி. 11 வகை விநாயகர்கள் உள்ளன.	07.00 - 12.00 04.00 - 08.00 சிவானந்த குருக்கள் 9791593564 98944 86890
சுந்தரமூர்த்தி பாடல் பெற்றது. கண் பார்வையிழந்த சுந்தரர் வெண்பாக்கத்தை நோக்கி வந்த போது அம்பாள் மின்னலைப் போல் ஒளி காட்டி வழிகாட்டினாள். கண் கேட்டதற்கு ஊன்றுகோல் தந்ததைக் கண்டு கோபமுற்ற சுந்தரர் நந்தி மேல் வீச கொம்பொடிந்தது.	தடித்கௌரி அம்பாள் உடனுறை ஆதாரதண்டேஸ்வரர் 06.00 - 11.00 05.00 - 8.00 சுப்பிரமண்ய குருக்கள் 044 - 27693559 27639725, 27639895 பிபி 92458 86900
பிருகு முனிவர் வழிபட்ட தலம். சுவாமி விமானம் தூங்கானை மாட அமைப்புடையது. சதுர ஆவுடையார்.	ஆன்ந்தவல்லி உடனுறை சிவானந்தேஸ்வரர் காலை 6 மணி முதல் இரவு 8 வரை ஆறுமுகம் குருக்கள் 044 - 27629144, 99412 22814
சிலந்தி, பாம்பு, யானை வழிபட்டு பேறு பெற்ற தலம். ராகு கேது பரிகார தலம். கண்ணப்பர் வீடுபேறு பெற்ற தலம். முசுகுந்தன், பரத்வாஜர், சிவகோசரியார் வழிபட்டது. அர்ச்சுனன் பரத்வாஜரை வணங்கிய இடம். சுவாமியின் தங்கக் கவசத்தில் 27 நட்சித்தரங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.	ஞானப் பிரசுன்னாம்பிகை உடனுறை ஸ்ரீகாளஹஸ்தீஸ்வரர் காலை 6 முதல் இரவு 9 வரை. (வெள்ளி, சனி ஞாயிறு, திங்கள்-இரவு 9.30 வரை) எஸ் முத்துக்குமார சுவாமி ஓதுவார்

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
20	திருவொற்றியூர் தியாகராஜசுவாமி திருக்கோயில் திருவொற்றியூர் சென்னை - 600019	சென்னை காலாடிப்பேட்டைக்கு அடுத்த பேருந்து நிலையம் தேரடி நிறுத்தம்.
21	திருவலிதாயம் சென்னை பாடி வல்லீஸ்வரர் ஸ்வாமி திருக்கோயில் பாடி சென்னை - 600050	சென்னை ஆவடி சாலையில் பாடி டிவி. எஸ். லூகாஸ் நிறுத்தம் அருகே படவெட்டியம்மன் கோயில் தெருவில் செல்லவும்.
22	(வட) திருமுல்லைவாயில் மாசிலாமணீஸ்வரர்	சென்னை ஆவடி சாலையில் அல்லது பூந்தமல்லி அம்பத்தூர் தொழிற்-பேட்டை செல்லும்

1.	மூவரால் பாடப்பெற்ற தலங்கள்	94
2.	சம்பந்தர் அப்பர் பாடியவை	84
3.	சம்பந்தர் சுந்தரர் பாடியவை	8
4.	அப்பர் சுந்தரர் பாடியவை	17
5.	சம்பந்தர் மட்டும் பாடியவை	45
6.	அப்பர் மட்டும் பாடியவை	18
7.	சுந்தரர் மட்டும் பாடியவை	10
		276

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
	65 சந்நிதி தெரு ஸ்ரீகாளஹஸ்தி - 517 644 (ஆபி) 08578 - 222240, 09848220173 (ஓதுவார்)
பட்டினத்தார் முக்தி தலம். சுந்தரர் சங்கிலியாரை மணந்த இடம். கலியநாயனார் அவதாரம் மற்றும் சுயம்பு மூலவர். ஐயடிகள், காடவர்கோன் முசுகுந்தன் வழிபட்ட தலம். கார்த்திகை பௌர்ணமி துவங்கி மூன்று நாட்களுக்கு மட்டுமே கவசமில்லை சுவாமிக்கு. கருவறை கஜப்ருஷ்ட வடிவம். மூலவர் சுயம்பு. சதுர வடிவ ஆவுடையார். கலசம் சார்த்தப்பட்டுள்ளது. புற்று வடிவான சுவாமியாதலால் தீண்டாத் திருமேனி. பிரளயகால அக்னி குண்டம் உள்ளது. வாசுகி என்கிற பாம்பு இறைவனோடு ஐக்கியமான தலம். பட்டினத்தார் சமாதி கோயில் உள்ளது. 27 நட்சத்திர லிங்கங்கள் உள்ளன. தியாகராஜருக்குத் தனி சந்நிதி உள்ளது. அத்தி, மகிழ மரம் தல விருக்ஷம். கர்ப்பக்கிரகத்தின் வடக்கில் வட்டப்பாறை அம்மன் சந்நிதி உள்ளது. சூரியன் தலைப்பகுதி, சந்திரன் கால் பகுதியில் உள்ள வகையில் மனித உடலின் உருவ அமைப்பு உள்ளது. இதில் பஞ்சாட்சர விளக்கம் உள்ளது.	திரிபுரசுந்தரி உடனுறை ஆதிபுரீஸ்வரர் மாணிக்கத்தியாகர், வடிவுடையம்மை 06.00 - 12.00 04.00 - 08.30 சோ. பரமசிவம் (மணியம்) 044 - 25733703, 94444 79057 ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை பௌர்ணமி நாளில் மட்டும் கலசம் அகற்றப்பட்டு புனுகு சட்டம், ஜவ்வாது, சாம்பிராணி முதலியன சாற்றப்படுகிறது. அபிஷேகம் ஆவுடையாருக்கு மட்டும் நடைபெறுகிறது.
குரு ஸ்தலம். குரு சந்நிதி உள்ளது. பரத்வாஜர், ராமர், ஆஞ்சனேயர், சூரியன், சந்திரன், இந்திரன் வலியன்(கருங்குருவி) வழிபட்ட தலம். பரத்வாஜர் கருங்குருவியாக சாபம் பெற்று தீர்த்தம் உண்டாக்கி விமோசனம் பெற்ற இடம். பிரம்மனின் இரு பெண்கள் கமலை, வல்லி விநாயகரை மணந்த இடம். கஜபிருஷ்ட விமானம். அழகிய புதிய அம்பாள் திருவுருவம் உள்ளது. இராமலிங்க அடிகள் பாடல் பெற்றுள்ளது. பிருகஸ்பதி தவம் செய்ததால் தக்ஷிணாமூர்த்தி விசேஷம்.	வல்லீஸ்வரர் உடனுறை ஜகதாம்பாள் 06.30 - 12.00, 04.30 - 08.30 எஸ் ஞானசம்பந்த குருக்கள் 044- 26540706
காஞ்சி மன்னன் தொண்டைமான் திக்விஜயம் செய்த போது ஒணன், காந்தன் என்னும்	லதாமத்யாம்பாள் உடனுறை

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
	திருக்கோயில் திருமுல்லைவாயில் அஞ்சல் திருவள்ளூர் மாவட்டம்-600 062	பேருந்தில் ஆவடியை அடுத்து கோயில். அதே வழியில் ஆவடி தாண்டி திருநின்றவூரில் பக்த வத்ஸலப் பெருமாள் கோயில் உள்ளது. இருதயாளீஸ்வரர் கோயில் எதிரில் உள்ளது.
23	திருவேற்காடு வேதபுரீஸ்வரர் திருக்கோயில் திருவேற்காடு அஞ்சல் திருவள்ளூர் மாவாட்டம் சென்னை - 600077	சென்னை திருவேற்காடு கருமாரிஅம்மன் கோயில் பேருந்து நிலையத்திலிருந்து மேற்கே ஒரு கி. மீ.
24	மயிலாப்பூர் கபாலீஸ்வரர் திருக்கோயில் மயிலாப்பூர் சென்னை - 600004	சென்னையின் அனைத்து பகுதிகளிலிருந்தும் பேருந்துகள் உள்ளன. திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள் கோயில் 4 கிமீ தூரத்தில் உள்ளது.
25	திருவான்மியூர் மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருவான்மியூர் சென்னை - 600041	சென்னையின் அனைத்து பகுதிகளிலிருந்தும் பேருந்துகள் உள்ளன. ஈ சீ ஆர் சாலையில் மாமல்லபுரம் செல்லும் பாதையில்

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
அசுரர்கள் எருக்கந்தூண்களும்,வெங்கலக் கதவும் பவழத்தூண்களும் கொண்டு ஆட்சி செய்தனர். கோயில் மணி சத்தம் கேட்டு மன்னன் வர ஒண-காந்தன் எதிர்த்தனர். இறைவன் பின் நந்தியை கொடுத்து உதவ வென்று கோயில் கட்டினான். கஜ பிருஷ்ட விமானம்.	நிர்மலமணீஸ்வரர் 06.30 04.00 நிர்வாக அதிகாரி 044 - 26376151
மூர்க்க நாயனார் அவதார ஸ்தலம். வெல்வேல் மரங்கள் வேதங்களாக வழிபட்ட ஸ்தலம். விஷக்கடி அண்டாது. ஆதிசேஷன் வழிபட்ட ஸ்தலம். கஜபிருஷ்ட விமானம். சூர சம்ஹாரம் ஆன பின்னர் முருகன் வழிபட்ட தலம். தெற்கே தோப்பில் வேத தீர்த்தம். ஞாயிறு நீராடுதல் அங்கம் குறைந்தோர்க்கு நோய் நீங்கும். 4 யுகங்களில் பசி, பிணி, பகையில்லாத பதி. மணிவண்ண நகர். பானு நகர், பரசுராம நகர், வேல வளம் இதர பெயர்கள்.	பாலாம்பிகை உடனுறை வேதபுரீஸ்வரர் காலை 5 முதல் இரவு 9 வரை நிர்வாக அதிகாரி 044 - 26800430, 044-26800487
வாயிலார் நாயனார் அவதார தலம். சம்பந்தர் எலும்பை (பூம்பாவையை) பெண்ணாக்கிய அற்புதத்தலம். மயிலாய் அம்பிகை பூசித்த தலம். முன்பிருந்த பழைய கோயில் கடற்கரையில் இருந்தது. இதை இடித்து சாந்தோம் கத்தீட்ரல் மாதா கோயில் உள்ளது. 63வர் சிறப்பு பெற்ற இடம். கயிலைக்கு நிகரான மயிலை எனப்பெயர் பெற்றது. முருகன் வேலாயுதம் பெற்றதாகவும் கூறப்படும் தலம்.	கற்பகாம்பாள் உடனுறை கபாலீஸ்வரர் 05.30 - 12.30 04.00 - 09.30 துணை ஆணையர் (அ) நிர்வாக அதிகாரி 044 - 24641670
அப்பைய தீக்ஷிதர் வேளச்சேரியில் இருந்து வழிபட்டார். நீர்ப்பிரளயமால் இறைவனைக் காண இயலாத போது மேற்கு நோக்கி இறைவன் காட்சிகொடுத்தார். அகத்தியருக்கு வைத்திய மூலிகைகளை இறைவன் உபதேசித்த தலம். வேதங்கள் வழிபட்ட தலம். தேவர்கள், சூரியன், பிருங்கி வழிபட்ட இடம். ஔஷதபுரி என்கிற பெயர் பெற்ற தலத்தில் மருத்துவராக இறைவன் அருள் பாலிக்கிறார். மூலவர் சுயம்பு. கோமுகம் மாறி உள்ளது. அமிர்தத்தால் ஆன சிவலிங்கம். வால்மீகி வழிபட்டு முக்தி அடைந்த நாள் பங்குனி பௌர்ணமியாகும்.	திரிபுரசுந்தரி உடனுறை மருந்தீசர் 06.00 - 12.00 04.00 - 09.00 நிர்வாக அதிகாரி 044-24410477

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
26	திருக்கச்சூர் கச்சூர் மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருக்கச்சூர் அஞ்சல் வழி சிங்கப்பெருமாள் கோயில் செங்கற்பட்டு வட்டம் காஞ்சி மாவட்டம் - 603204	சிங்கப்பெருமாள் கோயிலிருந்து ஸ்ரீபெரும்புதூார் சாலையில் ஒன்றரை கிமீ. தியாகராஜபுரம் திருக்கச்சூர் வழியில் வலப்புறம் சாலை. அருகில் மலைக்கோயில். சிங்கப்பெருமாள் பாடலாத்ரீ நரசிம்மர் கோயில், செட்டிபுண்யம் ஹயக்ரீவர் கோயில் மற்றும் மதுராந்தகம் ஏரிகாத்த ராமர் கோயிலும் (சுமார் 25 கிமீ) தரிசிக்கலாம்.
27	திருஇடைச்சுரம் திருவடிசூலம் ஞானபுரீஸ்வரர் திருக்கோயில் திருவடிசூலம் வழி செம்பாக்கம் காஞ்சிபுரம் மாவட்டம் - 603108	செங்கற்பட்டு திருப்போரூர் சாலையில் திருவடிசூலம் பேருந்து நிறுத்தம். 1 கி. மீ உள்ளே. அல்லது திருக்கழுக்குன்றம் பாதையில் சென்றால் திருப்போரூர் பாதை
28	திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் திருக்கோயில் திருக்கழுக்குன்றம் அஞ்சல் காஞ்சிபுரம் மாவட்டம் - 603109	செங்கற்பட்டிலிருந்து 14 கி மீ. மாமல்லபுரம் கல்பாக்கம் ஊர்ப்பேருந்து வழித்தடம். திருப்போரூரிலிருந்து 45 நிமிடப் பேருந்துப்பயணம்.

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
உபய விடங்கர் தலங்களில் ஒன்று. திருவொற்றியூர், திருவான்மியூர் மற்றவை. சோ-சிவன் மா-உமா ஸ்கந்தர்-முருகனாக (சோமாஸ்கந்தராக) இறைவன். திருமால் ஆமை (கச்சபம்) வடிவில் பூஜித்த தலம். சுந்தரருக்காக யாசகம் செய்து அந்தணர் உருவில் பசியை அடியாரோடு நீக்கிய தலம். இறைவன் திருவடி பதிந்த ஊர். இங்கு இரண்டு கோயில். (கீழே) தாழ (மேற்கே 1 கிமீ) மற்றும் மலைக்கோயில். அசுவினி தேவர்கள் வரம் பெற்ற தலம். அரிய மூலிகைகள் நிறைந்த மலை.	அஞ்சனாட்சியம்மை உடனுறை கச்சபேஸ்வரர் 08.00 - 11.30 05.30 - 08.00 என். முரளீதர குருக்கள் (அ) ஈ.ஓ 044 - 27463514, 27464325, 27233384, 9381186389
மரகத லிங்கம் அமைந்தது. கௌதமர், சனற்குமாரர் மற்றும் அம்பாள்பசுவாக வந்து பால் சொரிந்து வழிபட்ட தலம். 11 முக வில்வ மரம் உள்ள தலம். கருவறை அகழி அமைப்பு உடையது. சதுர பீட ஆவுடையார். தீபாராதனையில் மரகத லிங்கம் மிளிர்கிறது.	கோபரத்னாம்பிகை உடனுறை இடைச்சுரநாதர் 08.00 - 12.00 04.00 - 08.00 செல்லப்பா குருக்கள் 044-27420485, 94445 23890
வேதமே மலையாக உள்ள ஊர். உச்சிப்பொழுதில் கழுகு வந்து உணவு பெறுவதால் பட்சிதீர்த்தம். இறைவன் சுயம்பு. மார்க்கண்டேயர் இறைவனை வழிபட பாத்திரமின்றித் தவிக்க இறைவன் சங்கை உண்டு பண்ணிய தலம். 12 ஆண்டுக்கு ஒரு முறை சங்கு பிறப்பதாக ஐதீகம். அம்பாளுக்கு மார்பில் ஸ்ரீ சக்ர பதக்கம். வேதங்களே மலைகளாக உள்ள மறைக்காடு. தக்ஷிண கைலாயம் என்றும் போற்றப்படுகிறது. மலைக்கோவிலை கிரி வலம் வர பலன் கிட்டும். கீழே தாழக்கோயிலில் உள்ள ருத்திர கோடிஸ்வரர் சுயம்பு. இது தென் கைலாயமாகும். அது தேவார வைப்புத் தலம். ஈஸ்வரனுக்கு தனியான சகஸ்ரநாமம் உண்டு. தினமும் பாத அபிஷேகம் மட்டும் தான். குறிப்பிட்ட நாட்களில் முழு அபிஷேகம். ஆடிப்பூரம் 11 நாட்கள், நவராத்திரி 9 நாட்கள் பங்குனி உத்திரம் சிறப்பு. சுந்தரர் பொன் பெற்ற தலம்.	திரிபுரசுந்தரி உடனுறை பக்தவத்சலேஸ்வரர் தாழக்கோயில் 06.00-01.00, 04.00-09.00, மலைக்கோயில் 09.00-01.00, 04.30-06.30. டீ.சி.ஏ.வேதமூர்த்தி சிவாச்சாரியார் 044 - 27447139 044-27447393, 9894507959, 9443247394

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
29	அச்சிறுபாக்கம் அச்சரப்பாக்கம் ஆட்சீஸ்வரர் திருக்கோயில் அச்சிறுப்பாக்கம் அஞ்சல் மதுராந்தகம் வட்டம் காஞ்சிபுரம் மாவட்டம் - 603301	சென்னை திருச்சி சாலையில் மதுராந்தகம் தாண்டி இவ்வூர்.
30	திருவக்கரை சந்திரமௌலீஸ்வரர் வக்ரகாளியம்மன் திருக்கோயில், திருவக்கரை வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 604304	திண்டிவனம் மயிலம் வானூர் வழி பாண்டி செல்லும் பாதையில் பெரும்பாக்கத்தில் பிரியும் கிளையில் 7 கி மீ. ஸ்ரீவக்ர காளியம்மன் தற்போது பிரசித்தமாக விளங்குகிறது. வழியில் மயிலம் முருகன் கோயில் தரிசிக்கலாம். செண்டூரில் பாதை பிரிந்து செல்க.
31	திருஅரசிலி ஒழிந்தியாப்பட்டு அரசலீஸ்வரர் திருக்கோயில். ஒழிந்தியாப்பட்டு அஞ்சல் வானூர் வழி வானூர் வட்டம் விழுப்புரம் மாவட்டம் - 605109	திண்டிவனம் பாண்டி வழி கிளியனூர் சாலையில் தைலாபுரம் பிறகு கீழ்ப்புத்துப்பட்டு, ஒழிந்தியாப்பட்டு பிரிவில் 2 கி மீ திருவக்கரை தரிசனம் முடித்தும் வரலாம் பால்ஸ் இன்ஜினியரிங் கல்லூரி பாதை. திண்டிவனத்திலிருந்து மாத்தூர் நெசல் வழி பேருந்து செல்லும். ஸ்ரீகுமரன் டிராவல்ஸ் வண்டி மற்றும் ஆட்டோ உண்டு.
32	திருஇரும்பைமாகாளம் இரும்பை மாகாளேஸ்வரர் திருக்கோயில் (இடும்பை) இரும்பை அஞ்சல் வழி ஆரோவில் வானூர் வட்டம்	திண்டிவனம் பாண்டி வழி கிளியனூர் பிறகு திருச்சிற்றம்பலம் கூட் ரோடு தாண்டி இரும்பை பாதை பிரிகிறது 2 கி மீ தூரம்

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
விநாயகரை வணங்காது திரிபுரம் எரிக்க புறப்பட்ட போது தேர் அச்சு முறிந்த இடம் (அச்சு இறு பாக்கம்). பின் விநாயகர் அருள் புரிந்து திருவதிகையில் வென்றார். பாண்டிய மன்னன் கொன்றை மரத்தின் பொந்தை வெட்டிய போது இறைவனைக் காண த்ரிநேத்திரதாரி முனிவரிடம் செல்வம் கொடுத்து கோயில் கட்டினார். இருவரையும் ஆட்கொண்டதால் இரு சந்நிதி. மூலவர் சுயம்பு. அகலமான சதுர ஆவுடையார். சொரசொரப்பான திருமேனி. ஒரு தலையுடன் கூடிய இரு மான் சிற்பம் உள்ளது.	இளங்கிளியம்மை உடனுறை ஆட்சீஸ்வரர் 06.30 - 11.30 04.30 - 08.30 ஆர் . சங்கர் சிவாச்சாரியார் 044 - 27523019, 98423 09534
பூமியில் புதைந்த மரங்கள் அதே தோற்றத்தில் கல்மரங்களாக உள்ளன. சிலிகா ஊடுருவி இங்கு மரங்கள் கற்கலாகவும் நெய்வேலியில் உப்பு நீரில் புதைந்ததால் நிலக்கரியாகவும் மாறியது என்கிறது அறிவியல். வக்கிரன் வழிபட்ட தலம். வலிய கரை (சுற்றி கல் பாறைகள்) உள்ள இடம். வக்ரகாளியம்மன் சிறப்பு. பெருமாள் சந்நிதியும் உள்ளது.	அமிர்தேஸ்வரி உடனுறை சந்திரமௌலீஸ்வரா காலை 6 மணி முதல் இரவு 8.30 வரை செயல் அலுவலர் 0413 - 2688949 0413-2680870
சாளுவ மன்னனும் வாமதேவ முனிவரும் ப்ரதோஷ நாளில் பேறு பெற்றதால் ப்ரதோஷம் விசேஷம். மூலவர் குட்டையானது. ஆவுடையாரும் தாழ உள்ளது. ஞான சம்பந்தர் மடம் கோயிலுக்கு அருகாமையில். குலோத்துங்க, விக்ரம சோழன் கல்வெட்டுகள் உள்ளன. அரசிலியரால் படையெடுக்கப்பட்ட இடம்.	பெரியநாயகி உடனுறை அரசிலிநாதர் 07.30 - 08.30 05.00 - 08.00 மாதத்தில் 3 குருக்கள் (1-10) கணேச குருக்கள் 04147 - 295376 9994476960 (ஒ.கே.குமார் குருக்கள்) (11-20) 04147 - 235472 (21-30) சண்முக சுந்தரம்
குலோத்துங்கர் காலத்தில் கடுவெளிச்சித்தர் தவஞ்செய்தார். அங்கு பஞ்சம் தீர தாசி சித்தரிடம் உண்ண பழுப்பிலையை வேண்டிய போது அன்னமிட்டு பஞ்சம் நீக்க வேண்டினாள். தன் பணியாக அவளும் நடனமாடினாள். காற்சிலம்பு அவிழ, சித்தர் தாசி காலில் பூட்ட,	மதுரசுந்தரநாயகி உடனுறை மாகாளநாதர் 07.00 - 12.00 04.00 - 08.00 சுவாமிநாத குருக்கள் 9443465502

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
	விழுப்புரம் மாவட்டம் - 605010	
33	திருநெல்வாயல் அரத்துறை திருவரத்துரை, திருவட்டுறை ஆனந்தீஸ்வரர் (அரத்துறைநாதர்) கோயில் திருவட்டுறை அஞ்சல் திட்டக்குடி வட்டம் கடலூர் மாவட்டம் வழி விருத்தாசலம் (ஆர் எம் எஸ்) - 606111	தொழுதூர் விருத்தாசலம் சாலையில் தொழுதூரிலிருந்து 20 கி மீ தொலைவில் கொடிகளம் தொடங்கி பிரியும் பாதையில் 1 கி மீ. அக்ஷ்டோத்திர சிவலிங்கம், அக்ஷ்ட லக்ஷ்மி உள்ள தலம்.
34	பெண்ணாகடம் பெண்ணாடம் பிரளயகாலேஸ்வரர் (சுடர்கொழுந்தீஸர்) கோயில் பெண்ணாடம் அஞ்சல் திட்டக்குடி வட்டம் கடலூர் மாவட்டம் வழி விருத்தாசலம் (ஆர் எம் எஸ்) - 606105	விருத்தாசலம் திட்டக்குடி சாலையில் 17 கிமீ. சென்னை தொழுதூரிலிருந்து 15 கி மீ
35	திருக்கூடலையாற்றூர் நர்த்தனவல்லபேஸ்வரர் நெறிகாட்டுநாதர் கோயில் திருக்கூடலையாற்றூர் காவலாகுடி அஞ்சல் காட்டுமன்னார் கோயில் வட்டம் கடலூர் மாவட்டம் - 608702	சேத்தியாத்தோப்பு கும்பகோணம் பாதை குமாரகுடி - ஸ்ரீமுஷ்ணம் பாதையில் பிரிந்து 2 கிமீ சென்று காவலாகுடி சாலையில் சென்று பின் 2 கி மீ. மணிமுத்தாறு– வெள்ளாறு சேருமிடம் . சிதம்பரம் காவாலகுடி பேருந்து செல்லும்.
36	திருஎருக்கத்தம் புலியூர் ராஜேந்திரபட்டணம்	விருத்தாசலம் ஜெயம்கொண்டம் சாலை 12 கிமீ தூரத்தில் கோயில்.

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
மக்கள் ஏளனம் செய்தனர். இறைவனை நோக்கி சித்தர் வெகுண்டு பாட மூன்றாக சிதறியது லிங்கம்.	ச. பஞ்சறதில்லறன் குருக்கள் 94434 65502
சப்த ரிஷிகள் வழிபட்ட தலம். சேர, சோழ, பாண்டியர் வழிபட்டது. இரவானதால் இறையூரில் தங்கியிருந்த சம்பந்தருக்கு இறைவன் முத்துச்சிவிகையும், முத்துக்குடையும், முத்துச் சின்னமும் கொடுத்த தலம். விஷ்ணு, சனி, செவ்வாய், வால்மீகி பூஜித்த தலம். ஆதிதுறை, திருவாலந்துறை, திருமாந்துறை, திருஆடுதுறை, திருவட்டதுறை, தி.நெ.வா. அறத்துறை, திருக்கரந்துறை (ஏழு)	ஆனந்தநாயகி உடனுறை ஆனந்தீஸ்வரர் 07.00 - 11.00 04.00 - 08.00 எஸ் ஸ்வாமி நாத குருக்கள் 04143 - 246303
பெண் ஆ கடம் - தேவ கன்னியர், காமதேனு, வெள்ளையானை வழிபட்ட தலம். பூமிக்கு சென்ற இம்மூவரும் திரும்பாதது கண்டு இந்திரன் வந்து வழிபட்டான். மெய்கண்டார் அவதார தலம். பணியாளே சிவனடியாராக வரக் கண்டு, நீர் வார்க்கத் தாமதித்த மனைவியின் கையை வெட்டிய கலிக்கம்ப நாயனார் வீடுபேறு பெற்ற தலம். தூங்கானை மாடம் என்பது மற்றோர் பெயர். கஜபிருஷ்ட விமானம் உள்ளது. அப்பர் திரிசூல முத்திரை பெற்ற தலம். கர்ப்பக்கிரகத்தைச் சுற்றி ஜன்னல்கள் (ஜாலி) உள்ளதால் சுவாமியைச் சுற்றி வரும் போதும் தரிசிக்கலாம்.	ஆமோதனம்பாள் உடனுறை பிரளயகாலேஸ்வரர் 06.00 - 11.30 04.00 - 09.00 மலையப்பன் 9488046050 துரைசாமி குருக்கள் 04143-222788
சுந்தரர் முதுகுன்றம் சென்ற போது வணங்காது செல்ல இறைவன் இக்கோயிலுக்கு வழி காட்டுகிறார். மணிமுத்தாறு வெள்ளாறு கூடும் இடம். சரஸ்வதி வானத்திலிருந்து சங்கமம். பிரமனுக்கு நர்த்தனம் செய்து காட்டிய இடம். திருமுதுகுன்றத்திற்கு வழி கேட்க, இந்த ஊரைக் காட்டி மறைந்த இறைவனை இவ்வூரில் வணங்குகிறார். மூலவர் கம்பீரமாக உள்ளார். இரண்டு அம்பாள். நவக்கிரகம் இல்லை. கையில் எழுத்தாணியுடன் சித்ர குப்தர் உற்சவர் உள்ளது.	பராசக்தி, ஞானசக்தி உடனுறை நெறிகாட்டுநாதர் 06.00 - 11.00 04.00 - 08.00 பி. கிருத்திவாசக் குருக்கள் 99422 49938 04144-208704
வியாக்ரபாதர் பூஜித்த தலங்கள் புலியூர் என வழங்கப்படுகின்றன. சம்பந்தரின் உடனிருந்து	வீரார்முலையம்மன் உடனுறை

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
	நீலகண்டேஸ்வரர் திருக்கோயில் ராஜேந்திரப்பட்டணம் அஞ்சல் விருத்தாசலம் வட்டம் கடலூர் மாவட்டம் - 608703	அல்லது சென்னை தஞ்சை சாலையில் சேத்தியாத்தோப்பு அடுத்து ஸ்ரீமுஷ்ணம் விருத்தாசலம் பாதையிலும் செல்லலாம்.

நால்வர் குறு வரலாறு

1. திருஞானசம்பந்தர் சோழநாட்டில் சீர்காழியில் அந்தணர் குலத்தில் சிவபாரத இருதயர் மற்றும் பகவதி அம்மைக்கு கிபி 7-ம் நூற்றாண்டில் (634 -650) சற்புத்திர மார்க்கத்தில்(சரியை) வழிபட்டு, தோத்திரர் பூர்ணாம்பிகையை கைப்பிடித்து, ஆச்சாள்புரத்தில் வைகாசி மாதம் மூல நட்சத்திரத்தில் 16-வது வயதில் முக்தி பெற்றார்.

2. திருநாவுக்கரசர் நடுநாட்டில் திருவாமூரில் தொண்டை மண்டல சைவ வேளாளர் குலத்தில் கிபி 7-ம் நூற்றாண்டில் (564-645) புகழனர் மற்றும் மாதவியருக்குப் பிறந்து திருமணம் செய்து கொள்ளாமல் 81 வருடம் வாழ்ந்தார். தாச மார்க்கத்தில் (கிரியை) ஈடுபட்டு திருப்புகளூரில் சித்திரை சதயத்தில் முக்தி பெற்றார்.

3. சுந்தரர் நடுநாட்டில் திருநாவலூரில் ஆதிசைவர் குலத்தில் கிபி 7-ம் நூற்றாண்டில் (694 - 712) பிறந்து சடையனார் மற்றும் இசைஞானியாருக்குப் பிறந்து பாவையார் - சங்கிலியாரை மணந்து 18 வருடம் உயிர் வாழ்ந்து சகமார்க்கத்தில் (யோகம்) ஈடுபட்டு திருவஞ்சைக்களத்தில் ஆடி சுவாதி நட்சத்திரத்தில் முக்தி பெற்றார்.

4. மாணிக்கவாசகர் பாண்டிய நாட்டில் திருவாதவூரில் அமாத்திய அந்தணர் குலத்தில் கிபி 9-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சம்புபாத இருதயருக்கும் சிவஞானவதி அம்மைக்கும் பிறந்து திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்ந்து சன்மார்க்கத்தில் (ஞான) ஈடுபட்டு ஆனி மக நட்சத்திரத்தில் 32-வது வயதில் முக்தி பெற்றார்.

இவர்கள் முறையே 385 பதிகம் (4169 பாடல்கள்), 313 பதிகம் (3066 பாடல்கள்), 100 பதிகம் (1026 பாடல்கள்), 51 பதிகம் (1058 பாடல்கள்) பாடினர்.

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
யாழ் வாசித்த திருநீலகண்ட யாழ்பாணர் அவதரித்த தலம். திருவுருவம் மதங்க சூளாமணியாருடன் உள்ளது. சிவ பெருமான் வேத ஆகமங்களின் உட்பொருளை உபதேசித்த போது அதனைப் பாரா முகமாக கேட்ட குற்றத்திற்காக உமையை மீனவர் குலப் பெண்ணாகப் பிறக்குமாறு சாபம் அளித்தார். முருகன் சினந்து அந்நூல்களை கடலில் வீசி எறிந்தார். அக்குற்றத்திற்காக உருத்திர சன்மராய் பிறந்த குமரக் கடவுள் சிவபிரானைப் பூசித்து ஊமை தன்மை நீங்கப் பெற்றார். எனவே திக்கு வாய், சரியாக பேச முடியாதவர் பலன் பெறும் தலம். தேவ கணங்கள் வந்து பழமலைநாதரை வணங்கி அதிகமான வரங்களும் எளிதில் முக்தியடையக் கூடிய சிவஸ்தலம் எது எனக்கேட்க இங்கே வந்து சிவலிங்கத்தைப் பூசித்து முக்தி அடைந்தனர். இராசராச சோழன் மகப்பேறு வேண்டி வழிபட்டதால் இராசேந்திர சோழனை மகனாகப் பெற்றான். இதனால் இத்தலத்திற்கு இராசேந்திரப் பட்டணம் என்று பெயர். நைமிசாரண்ய முனிவர்களில் பலர் மரங்களாக உருக்கொண்டு வசிக்க வேடர்கள் அம்மரத்தை வெட்டி விற்க குமரேசர் `எவரும் விற்பனைக்கு என்று வெட்டாத வெள்ளெருக்கு மரமாக இருக்கவும்` எனக் கூற அவ்வாறு இருந்தனர். உச்சினி பட்டணத்து ராஜா சுவேதன் முன் செய்த கரும வினையால் வெண்குஷ்டம் ஏற்பட்டு இருந்த போது சிவனை இரவு பகல் வேண்ட இத்தலத்தில் உள்ள ஸ்கந்த புஷ்கரணியில் மூழ்கி நீராடு எனக்கூறக் கேட்டு, அவ்வாறே வழிபட்டு நோய் நீக்கம் பெற்றான். எருக்கத்தம் புலியூரில் செய்த பாதகங்கள் ஒருவனைக் கெடுத்துக் கொன்றுவிடும். மற்ற தலங்களில் இழைத்த பாவமாவது இங்கு வர நிவர்த்தியாகும். ஆனால் இங்கு இழைத்த பாவங்கள் எந்த தலத்திற்குப் போனாலும் தீராது என்கிறது வரலாறு.	நீலகண்டேஸ்வரர் 06.00 - 11.00 04.00 - 08.00 சிவகணேஷ் 9976179524 04143-243533, 9360637784

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
37	திருத்தினைநகர் தீர்த்தனகிரி சிவக்கொழுந்தீசர் திருக்கோயில் தீர்த்தனகிரி அஞ்சல் கடலூர் வட்டம் கடலூர் மாவட்டம் - 608801	கடலூர் சிதம்பரம் பாதையில் சிதம்பரத்திற்கு 45 ஆம் கி.மீ ஆலப்பாக்கம் புதுச்சத்திரம் இடையே மேட்டுப்பாளையத்தில் இருந்து 5 கி.மீதானூர் இடப்புறம் சாலையில் கோயில்.
38	திருச்சோபுரம் தியாகவல்லி மங்களபுரீஸ்வரர் திருக்கோயில் திருச்சோபுரம் தியாகவல்லி அஞ்சல் கடலூர் வட்டம் கடலூர் மாவட்டம் - 608801	கடலூர் சிதம்பரம் பாதையில் ஆலப்பாக்கம் புகை வண்டி நிலையம் கேட்டை தாண்டி உப்பங்கழியின் மேல் பாலம் வழியாக அக்கரையை அடைந்து சவுக்குத் தோப்பு அருகே.
39	திருவதிகை பண்ருட்டி திருவதிகை வீரட்டேஸ்வரர் திருக்கோயில் திருவதிகை பண்ருட்டி அஞ்சல் கடலூர் மாவட்டம் - 607106	பண்ருட்டி கடலூர் பாதையில் பண்ருட்டியிலிருந்து 2 கி.மீ
40	திருநாவலூர் திருநாமநல்லூர் பக்தஜனேஸ்வரர் திருக்கோயில்	சென்னை திருச்சி சாலையில் விழுப்புரம் தாண்டி உளுந்தூர்ப்பேட்டை முன்பு மடப்பட்டு தாண்டி திருநாவலூர்

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
துர்வாசர் பிருங்க ரிஷிக்கு இட்ட சாபம் நீங்கிய தலம். விஷ்ணு, பிரம்மகுமாரன் ஜாம்பவான், பூஜித்த தலம். 4 யுகங்களைக் கடந்த தலம். ஐயன் எழுந்த ஊர்ப்பெரியான் விதைத்த தினையை அன்றே விளைவித்து அருளியதலம். பதஞ்சலி வியாக்ர பாதர் இத்தலத்தில் வந்து கல்யாண கோலத்துடன் பூர்ணகும்பம் கொடுத்து இறைவனை அழைத்துச் சென்ற தலம். விஷ்ணு முராசுரனை வதைத்து முராரி பட்டம் பெற்ற இடம். கொன்றை தல விருக்ஷம். பாதி கோயில் பாதி குளம் எனப் பெயர் பெற்ற இத்தலத்தில் இறைவன் ஏர் பிடித்ததாக வரலாறு.	நீலாயதாட்சி உடனுறை சிவக்கொழுந்தீசர் 06.00 - 12.00 05.00 - 08.00 டிஎஸ். வெங்கட்ராமன் குருக்கள் 9965328278, 9965328279(எஸ்.சுந்தர்) 04142-289861, 9786467593 99422 48966
சோழபுரம் மருவி இந்தப்பெயரும் திரிபுவனச்சக்ரவர்த்தியின் முதல் மனைவி தியாகவல்லியின் பெயரும் இந்த ஊருக்கு. மதுரை ராமலிங்க சிவயோகியார் மணல் மேடாக இருந்ததைக்கண்டு மணலில் புதைந்திருந்த விமானகலசம் மட்டும் மேலே தெரிய கோயில் தோண்டி எடுக்கப்பட்டது. மணல்சூழந்து இருந்ததால் விக்ரகங்கள் வழுவழுப்பாக உள்ளன.	தியாகவல்லி உடனுறை மங்களபுரீஸ்வரர் 08.30 - 11.00 05.30 - 08.00 ஆர். விஜயகுமார் குருக்கள் 98436 70518 9442585845
தாருகாட்சன் போன்ற மூன்று அசுரர்களை சம்ஹாரம் செய்த தலம். இங்கு வழிபட்டால் கயிலைக்கு சென்ற பலன் உண்டு. அல்சர் (சூலை நோய்) நிவர்த்தி ஆகும். அப்பர் சூலை நோய் நீங்கிய தலம். உழவாரப்பணியில் அவர் தொடங்கி ஈடுபட்ட தலம். வாயிலில் இருபுறத்திலும் 108 கரண பரத ஸாஸ்த்ர சிற்பங்கள் உள்ளன. அட்ட வீரட்டானத்தலம். பெரிய மூலவர் 16 பட்டையுடன் உள்ளார். கருவறை தேர் போன்று நிழல் பூமியில் விழாதவாறு உள்ளது. அப்பர் தமக்கை திலகவதியுடன் தங்கி தொண்டு செய்த தலம்.	திரிபுரசுந்தரி உடனுறை வீரட்டேஸ்வரர் 06.00 - 12.00 04.30 -09.30 எஸ்.சீனு (தமிழ் மாத தேதி 1-15), கே.சேகர் (15 - 30 தேதி) 04142-240317(சீனு), 04142-240246, 94439 88779 (நடன சேகர்) சீனு 94427 80111
சுந்தரர் அவதாரத்தலம். சுக்ரன் வழிபட்ட தலம். உள்ளே பெருமாள் சந்நிதியும் வழிகாட்டிய முதியவர் பாதுகையும் உள்ளது. சுந்தரர் உற்சவமூர்த்தி அபூர்வ அமைப்புடன் மன்னர்	சுந்தராம்பிகை உடனுறை பக்தஜனேஸ்வரர் 06.00 - 12.00 04.30 - 08.30

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
	திருநாவலூர் அஞ்சல் உளுந்தூர்பேட்டை வட்டம் விழுப்புரம் மாவட்டம் - 607204	ஊராட்சி ஒன்றிய பண்ருட்டி சாலை இடப்பக்கம் 2 கி மீ. கெடிலம் ரோடு பஸ் நிறுத்தத்தில் இறங்கவும். பண்ருட்டியிலிருந்து வரும்போது திருவாமூர் அப்பர் பிறந்த ஊர் உள்ளது.
41	திருமுதுகுன்றம் விருத்தாசலம் பழமலைநாதர் திருக்கோயில் விருத்தாசலம் அஞ்சல் கடலூர் மாவட்டம்- 606001	விருத்தாசலம் இரயில் நிலையம் அருகில்
42	திருநெல்வெண்ணெய் நெய்வெணை சொர்ணகடேஸ்வரர் நெல்வெண்ணெயப்பர் கோயில் நெய்வெணை கிராமம் கூவாடு அஞ்சல் வழி எறையூர் உளுந்தூர்பேட்டை வட்டம் விழுப்புரம் மாவட்டம்-607201	உளுந்தூர்ப்பேட்டை திருக்கோயிலூர் வழி எலவானாசூர்கோட்டை ரோடு வந்து எறையூர் அடைந்து வடகுரும்பூர் வழியாக 4 கி.மீ ஊர் உள்ளது
43	திருக்கோவலூர் திருக்கோயிலூர் வீரட்டேஸ்வரர் திருக்கோயில் கீழையூர் திருக்கோயிலூர் அஞ்சல் திருக்கோயிலூர் வட்டம் விழுப்புரம் மாவட்டம் - 605757	திருவண்ணாமலையிலிருந்து 35 கி. மீ. தெண்பெண்ணையாற்று பாலம் கடந்து கடலூர் பண்ருட்டி பாதை திரும்பி கீழையூர் (கீழுரில்) கோயில். திருக்கோவிலூர் த்ரிவிக்ரமப் பெருமாள் 2 கி.மீ தூரத்தில் உள்ளது. மணலூர்பேட்டை(13 கி.மீ தூரத்தில்) அருகே திருவரங்கம் மற்றும் ரிஷிவந்தியம் தலங்கள் உள்ளன.

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
கோலமும் மற்றும் சிவனடியார் கோலமும் கலந்து காணப்படுகிறது. ப்ரகாரத்தில் தனியே பெரிய சிவலிங்கம் உள்ளது. கருவறை சுவற்றில் சண்டிகேசர் கதை உள்ளது.	வி. சம்பந்த குருக்கள், முத்து குருக்கள் (சுந்தரமூர்த்தி நாயனார் பரம்பரை) 04149 - 224391, 94433 82945
பிரமனும் அகத்தியரும் வழிபட்டது. சுந்தரர் பரவையாருக்காக பொன்பெற்று பொன்னை இங்குள்ள மணிமுத்தாற்றில் இட்டு திருவாரூர் கமலாலயத்தில் எடுத்துக்கொண்டார். இங்கு இறப்போருக்கு இறைவன் தன் தொடை மீது கிடத்தி உபதேசம் செய்ய இறைவி முந்தானையால் விசிறி இளைப்பாற்றுகிறாள் என கந்த புராணம் கூறுகிறது. ஆழத்துப் பிள்ளையார் சந்நிதி பள்ளத்தில் உள்ளது.	பெரியநாயகி உடனுறை பழமலைநாதர் 06.00 - 12.00 04.00 - 09.00 யூ. பாலசுந்தரமூர்த்தி குருக்கள் 04143 - 230203, ஈ.ஓ (98650 21498)
மூலவரை தரிசிக்க வாயிலில் திருமால் திருமகளுடன் காட்சி தருகிறார். செல்வத்தை வாரி வழங்கக்கூடிய இறைவன். ஒன்றைப் பத்தாக்கும் ஆற்றல் கொண்டவன். பொற்குடம் கொடுத்த நாயனார் என இறைவன் பெயரை கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.	ப்ருஹன்நாயகி உடனுறை வெண்ணெயப்பர் எல்லா நேரமும் தரிசனம் சபாபதி குருக்கள், ஆர். கோவிந்தராஜுலு, திருப்பணிக்குழு தலைவர் 04149-209 097, 04149-291786 9486282952
64 பைரவர்கள் தோன்றிய வாஸ்து பூஜை மூலவர்கள் தலம். இங்கு வழிபட்டு பூர்வ ஜென்ம சாப விமோசனம் பெறலாம். அஷ்ட புஜ விஷ்ணு துர்க்கை தரிசனம். இராசராசன் பிறந்த ஊர். இவர் தமக்கை குந்தவை சுவாமிக்குபொன் பூ மற்றும் பிற பொருள்கள் வழங்கிய ஊர். கபிலர் உயிர் நீத்த இடம். அட்டவீரட்டானத் தலம்.	பெரியநாயகி உடனுறை வீரட்டேஸ்வரர் 06.30-12.00 05.00 - 08.30 எஸ். ரமேஷ், பாபு- (04153- 253532) நிர்வாக அதிகாரி (9344879787) 94862 80030, 98426 23020, 98423 10031 (சுவாமிநாத குருக்கள்) மற்றும் 04153-224036 (தபோவனம்)

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
44	அறையணிநல்லூர் அரகண்டநல்லூர் அதுல்ய நாதேஸ்வரர் திருக்கோயில் அறையணி நாதேஸ்வரர் தேவஸ்தானம் அரகண்டநல்லூர் அஞ்சல் திருக்கோயிலூர் வட்டம் விழுப்புரம் மாவட்டம்-605752	திருவண்ணாமலையிலிருந்து - பெண்ணையாற்று பாலம் முன்பே இடப்புறம் விழுப்புரம் பாதை 1 கி.மீ (காவல் நிலையம்) (அல்லது) திருக்கோவிலூரிலிருந்து பாலம் கடந்தால் கோயில். அருகே அந்திலி நரசிம்மர் கோயில் உள்ளது. திருக்கோவிலூரிலிருந்து பேருந்து வசதி உள்ளது.
45	இடையாறு டி. எடையார் மருதீஸ்வரர் தேவஸ்தானம் டி எடையார் அஞ்சல் திருக்கோயிலூர் வட்டம் வழி பெரிய செவலை விழுப்புரம் மாவட்டம் -607203	திருக்கோயிலூர் திருவெண்ணைநல்லூர் வழி அரசூர் பாதையில் சித்தலிங்க மடம் அடுத்து டிஎடையார்
46	திருவெண்ணெய்நல்லூர் கிருபாபுரீஸ்வரர் தேவஸ்தானம் திருவெண்ணெய்நல்லூர் அஞ்சல் திருக்கோயிலூர் வட்டம் விழுப்புரம் மாவட்டம்-607203	திருவெண்ணெய் நல்லூர் இரயில்வே லெவல் க்ராஸிங் தாண்டி 5 கி.மீ இடப்புறம் சாலை (அல்லது) பண்ருட்டி அரசூர் சாலை அல்லது மடப்பட்டி பெரிய செவலை வழியும் உண்டு. பண்ருட்டியிலிருந்து பேருந்து வசதி உள்ளது.
பஞ்ச சபையில் இது சித்திரசபை.பட்டினத்தார், மாணிக்கவாசகர், அருணகிரியார் ஆகியவர் பாடிய இடம். திருமால் வடிவில் இருந்த மூர்த்தியை அகத்தியர் சிவலிங்கமாக மாற்றிய இடம். சங்கு வடிவில் கோயில். அகத்தியரின் ஐந்து விரல்கள் திருமேனியில் உள்ளன. ஸ்ரீதேவியை குழல்வாய் அம்மையாகவும், பூதேவியை பராசக்தியாகவும் மாற்றினார். அகத்தியரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பராசக்தி பீடம் உள்ளது.	குழல்வாய்மொழியம்மை உடனுறை குற்றாலநாதர் 06.00 - 12.00 04.30 - 08.00 நிர்வாக அதிகாரி 04633 - 283 138 04633-210138
வேதபட்டர் இறைவனுக்கு திருவமுது ஆக்குவதற்கு உலரப்போட்டிருந்த நெல், மழையால் நனையாதவாறு இறைவன் வேலியிட்டுக் காப்பாற்றிய இடம். பாற்குடம் சுமந்த முழுதுங் கண்டராமக்கோன் மூங்கில் வடிவமாக இருந்து இடறச்செய்து பாலைத் தன் மீது கவிழச்செய்து, அதனால் வெட்டுண்டுகாட்சி தந்த வேணுவனநாதர். திருமேனியில் வெட்டுப்பட்ட அடையாளம் உள்ளது. இப்போதுள்ள ஆவுடையார் 21ஆவது என்றும் 20 பூமியில் உள்ளன என்றும் கூறப்படுகிறது. அன்வர்கான் என்ற இஸ்லாமியனின் மனைவியின் வயிற்றுவலி போக்கிய சரித்திரம் உள்ளது. உற்சவர் திருமணத்திற்காக தாரைவார்க்கும் கோலம். திருமால் மார்பில் சிவலிங்க அடையாளம். அகத்தியர் பிரதிஷ்டைசெய்த சால்வடீஸ்வரர் தாழ்வில் உள்ளது. பஞ்ச சபைகளில் தாமிர சபை. சுரதேவர் 3 தலை, கால், கைகளுடன் உள்ளார். மிளகு அரைத்துச்சார்த்தி வெந்நீரால் அபிஷேகம் செய்தால் சுரம் தீரும். தாமிர சபை.	காந்திமதியம்மை உடனுறை நெல்லையப்பர் 05.30 04.00 நிர்வாக அதிகாரி 0462 - 2339910

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
259	திருப்புக்கொளியூர் அவிநாசி அவிநாசிலிங்கேஸ்வரசுவாமி திருக்கோயில் அவிநாசி அஞ்சல் அவிநாசி வட்டம் திருப்பூர் மாவட்டம்-641654	கோவையிலிருந்து 40 கி.மீ. திருப்பூரிலிருந்து 14 கி.மீ திருமுருகன்பூண்டியிலிருந்து 5 கி.மீ கோவை ஈரோடு நெடுஞ்சாலையில் உள்ளது. கோவை, சேலம், ஈரோடு, திருப்பூர் பேருந்துகள் செல்லும். ஈரோடிலிருந்து 60கி.மீ. பழைய பஸ் ஸ்டாண்டில் இறங்கினால் நடந்தே கோயிலுக்குச் செல்லலாம்.
260	திருமுருகன் பூண்டி முரகநாதேஸ்வரர் தேவஸ்தானம் திருமுருகண்பூண்டி அஞ்சல் அவிநாசி வட்டம் திருப்பூர் மாவட்டம்-641652 **சப்தஸ்தானத் தலம் (நீராடுவதற்கு உரிய புண்ணிய தலங்கள்)** 1. திருவையாறு 2. திருப்பழனம் 3. திருச்சோற்றுத்துறை 4. திருவேதிக்குடி 5. திருக்கண்டியூர் 6. திருப்பூந்துருத்தி 7. திருநெய்தானம்	அவிநாசியிலிருந்து 5 கி.மீ. திருப்பூர் சாலையில் 5 கி.மீல் உள்ளது.

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
பழையபதியாகிய புக்கொளியூர்நத்தம் அழிந்து பிற்காலத்தில் தோன்றிய புதிய நகரமே அவிநாசியாகும். விநாசம் இல்லாதது. முதலில் விநாயகரைதரிசித்து பிறகு தவத்திலிருக்கும் பாதிரி மரத்து அம்பாளை தரிசித்துபிறகுதான் சுவாமியை தரிசிக்க வேண்டும். கால பைரவர் சந்நிதி உள்ளேஇருப்பது இங்கு மட்டும்தான். இவருக்கு வடைமாலை சாற்றுவது விசேஷம். 1 கிமீ தூரத்தில் முதலையுண்ட பாலனை மீட்ட ஏரியும் கரையில் சுந்தரர் சந்நிதியும் உள்ளது. சுவரில் அம்பாள் சந்நிதியில் தேள் உருவம் உள்ளது. அம்மனை வழிபட்டால் விஷம் நீங்கும். அருகில் உள்ள சேவூரும், மொக்கணீசுரரும் வைப்புத் தலங்கள். பைரவ க்ஷேத்திரம் இது. அவினாசி அம்பாள் மீது ஒரே நாளில் 100 பாடல்கள் இயற்றப்பட்டது.	கருணாம்பிகை உடனுறை அவிநாசிநாதர் 06.00 - 01.00 04.00 - 08.00 ஈ.ஓ. 04296-273113 ஆர்.பிரபு விஸ்வநாத குருக்கள் 9994884996, 9952820917
முருகன், அகத்தியர், மார்க்கண்டேயர்,துர்வாசர் வழிபட்ட தலம்.துர்வாசர் கற்பக உலகிலிருந்து மாதவிமரத்தை (குருகத்தியை) இங்கு கொண்டு வந்ததால் மாதவி வனம். சுந்தரர் இவ்வழியே செல்லும்போது, பூத கணங்களை வேடர்வடிவில் ஏவிச் சுந்தரரின் செல்வங்களைப் பறித்துக் கொண்ட தலம். வழிமறித்து நிதிபறித்த இறைவன் இருக்குமிடத்தைக் கூப்பிட்டுக் காட்டிய இடம் 1 கிமீ தொலைவில் வேறுபறி நடந்த இடமாக உள்ளது. சுந்தரர் உருவங்கள் இரண்டு உள்ளன. ஒன்று செல்வத்தை இழந்ததால் வாடியும் மற்றொன்று முகமலர்ச்சியுடன் செல்வம் பெற்றவுடனும் இருக்கின்றன. சித்தப்பிரமை, பைத்தியம், பில்லி சூனியம் நீங்க இங்குள்ள தீர்த்ததில் நீராடி வழிபடுவர். பல நாட்கள் தங்கியும் வழிபடுகின்றனர். சற்றுத்தொலைவில் மாலாதரன் எனும் வேட மன்னன் வழிபட்ட மாதவனேஸ்வரர் கோயில். சுவாமி சுயம்பு. ஆலயத்தை பார்த்தவாறு நந்தி சுதையால் செய்யப்பட்டு மண்டபத்தின் மேல் உள்ளது. நிருதி விநாயகர், கேது சந்நிதி உள்ளன.	ஆலிங்க பூஷணஸ்தனாம்பிகை உடனுறை முருகநாதேஸ்வரர் 05.30 - 01.00 03.30 - 08.10 அர்த்தநாரி சிவம் குருக்கள் 04296 - 273 507, 94434 59074

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
261	திருநணா பவானி சங்கமேஸ்வரர் தேவஸ்தானம் பவானி மற்றும் வட்டம். ஈரோடு மாவட்டம்-638301	சேலம், ஈரோடு,கோவையிலிருந்து பேருந்துகள். ஈரோடிலிருந்து 12 கிமீ. பவானி காவேரி ஆறு சங்கமம். பழைய பஸ் ஸ்டாண்டில் இறங்கினால் கோயிலுக்கு நடந்தே செல்லலாம்.

கும்பேஸ்வரருடைய சப்த ஸ்தானங்கள்

1. கும்பகோணம் 2 கலயநல்லூர் 3. வலஞ்சுழி
4. சுவாமிமலை 5 தாராசுரம் 6. கொட்டையூர்
7. மேலைக்காவேரி

முக்தித் தலங்கள்

1. காஞ்சி 2. மதுரா 3. ஹரித்வார்
4. அவந்திகா (உஜ்ஜயினி) 5. அயோத்தி 6. துவாரகை
7. காசி

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
262	கொடிமாடச்செங்குன்றூர் திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் திருச்செங்கோடு மற்றும் வட்டம் நாமக்கல் மாவட்டம்-637211	ஈரோடு, நாமக்கல் ஊரிலிருந்து பேருந்துகள். ஈரோடிலிருந்து 20 கிமீ. நாமக்கல்லிலிருந்து 32 கிமீ. அருகே நாமக்கல் நரசிம்மர் கோயில் உள்ளது. மலை மேல் தேவஸ்தானம் பேருந்து செல்கிறது. திருச்செங்கோடிலிருந்து பவானி செல்பவர்கள் சங்ககிரி வழியாகச் செல்லலாம். திருச்செங்கோடிலிருந்து 11 கிமீ. சங்ககிரி பவானி 22 கிமீ. சேலம் பேருந்துகள் இந்த வழியாக வரும்.

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
பவானி காவிரியோடு சங்கமிக்கும் இடம். குபேரன், விசுவாமித்திரர் பராசரமுனிவர் வழிபட்டது. உள்ளே ஆதிகேசவ பெருமாள் நரசிம்மர் சந்நிதி உள்ளன. தீர்த்தத்தில் நீராடல் விசேஷம். 19-ஆம் நூற்றாண்டில் டபிள்யூ. காரோ என்ற வெள்ளையத்துரை மாவட்ட ஆட்சியாளர் இங்கு வந்து பணி நிமித்தமாகத் தங்கினர். இரவு படுத்து உறங்கும்போது மின்னலுடன் இடி இடித்துக்கொண்டிருந்தது. ஒரு சிறிய குழந்தை உறங்குகின்ற துரையை கையைப்பிடித்து வெகு வேகமாக இழுத்து வந்தது. மறுநிமிடம் கட்டிடத்தின் கூரை கீழே விழுந்து நொறுங்கியது. குழந்தையை துரை கூப்பிடக் கூப்பிடக் கேட்காமல் சென்றது. துரை பின் தொடர்ந்து செல்ல கோயிலுக்குள் குழந்தை மறைந்தது. அம்பிகையை தரிசிக்க ஆலயத்துள் பிற மதத்தினருக்கு தடை என்ற நெறியை மீற எண்ணமில்லாதலால் வெளி மதிலில் ஓர் துவாரம் செய்து கண்குளிரக் கண்டார். உயிர் காத்த அம்பிகைக்கு நன்றியாக தந்தத்தாலான ஊஞ்சல் பரிசாக அளித்தார்.	வேதாம்பிகை உடனுறை சங்கமேஸ்வரர் 05.00 - 01.00 04.00 - 08.00 செயல் அலுவலர் 04256 - 230192
மலைமேல் கோயில். சிவாலயமாக இருப்பினும் முருகன் பிரசித்தமானதலம். மேலமாட வீதியிலிருந்து நாகம் போல் இக்கோயில் காட்சி தருவதால் நாகாசலம் என்னும் பெயர். செந்நிறமாக இருப்பதால் செங்கோடு. அர்த்தநாரித் தலம் 1200 படிகள் ஏறவேண்டும். 20 அடி நீளம் பாம்பு வடிவாக ஓர் இடத்தில் உள்ளது. 60-ஆம் படி விசேஷமானது. இங்கு செய்யப்படும் சத்தியம் நீதிமன்றத்திலும் செல்லும் எனக் கூறப்படுகிறது. வெள்ளைப் பாஷாணத்தால் ஆன சுயம்பு மூர்த்தி. உளிபடாத விடங்கம். சதுர பீடம். மூலவர் லிங்க வடிவில்லாத அர்த்தநாரீஸ்வரர். இதுவும் வெள்ளைப் பாஷாணம். திருவடியின் கீழ் குளிர்ந்த நீர் சுரக்கின்றது. அமாவாசை நாளில் இந்நீர் அண்டாக்களில் சேகரிக்கப்பட்டு அன்பருக்கு தீர்த்தமாக வழங்கப்படுகிறது. கேதார கௌரி மரகதலிங்கத்தைப்பூசித்து	பாகம்பிரியாள் உடனுறை அர்த்தநாரீஸ்வரர் காலை 6 முதல் மாலை 6 மணி வரை துணை ஆணையர் (அ) நிர்வாக அதிகாரி, வி.என்.எஸ். ஞானமணி 04288-255925, 93620-23163, 93620 - 22900 மலைக்கோவில் 04288-2253241 9364229181

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
263	வெஞ்சமாக்கூடல் வெஞ்சமாங்கூடலூர் விகிர்த்தநாதேஸ்வரர் திருக்கோயில் வெஞ்சமாங்கூடலூர் அஞ்சல் வழி மூலப்பாடி அரவக்குறிச்சி வட்டம் கரூர் மாவட்டம்-639109	கரூர் அரவக்குறிச்சி சாலையில் 13 கிமீ, சீத்தப்பட்டி(அல்லது) ஆறு ரோடு பிரிவில் 8 கிமீ. கரூர்-ஆற்றுமேடு பேருந்து இவ்வூர் வழியாக செல்லும் கரூரிலிருந்து திண்டுக்கல்லுக்குப் போகும் பேருந்துகள் செல்லும் கரூர் பைபாஸிலிருந்து வரும் போது முதலில் தான்தோன்றி மலை பெருமாள் கோயில் வளைவு தாண்டியவுடன் அதே இடப்புறத்தில் போலீஸ் சர்க்கிள் வரும் அதைத் தாண்டி வரும் ஆறு ரோடில் பிரிட்ஜ் மேல் செல்லாமல் சென்றால் ஊர். அரவக் குறிச்சி சாலையில் சென்றால் சுற்று. கரூரிலிருந்து வெஞ்சமாக்கூடல் 22 கிமீ.
264	திருப்பாண்டிக்கொடுமுடி கொடுமுடி மகுடேஸ்வரர் தேவஸ்தானம் கொடுமுடி ஈரோடு மாவட்டம்-638151	திருச்சி ஈரோடு இருப்புப்பாதையில் உள்ளது. ஈரோட்டிலிருந்து 39 கிமீ கரூரிலிருந்து 25 கிமீ.

சுந்தரர் பொன் பெற்ற தலங்கள்

1. திருவெஞ்சமாக்கூடல்
2. திருநாகை
3. திருப்புகலூர்
4. திருப்பாச்சிலாச்சிராமம்
5. திருமுதுகுன்றம்
6. திருமுருகன்பூண்டி
7. திருஒணகாந்தன்தளி

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
இறைவனின் பாகத்தைப்பெற்றாள். உற்சவர் உள்ளது. தம்பதியருக்குள் ஒற்றுமை ஏற்படுத்தும் தலம்.	
வேடசந்தூர் அருகில் உள்ள அணைக்கட்டு உடைந்து குடகனாற்று வெள்ளத்தில்கோயில் கருங்கற்கள் 2 கிமீ தூரம் அடித்துச் செல்லப்பட்டு 1986-ஆம் ஆண்டு ஈரோடு அருள் நெறிக் கூட்டத்தார் புதுப்பித்த தலம். வெஞ்சமன் என்னும் வேட்டுவ மன்னன் ஆண்டதாலும், அமராவதியின் கிளை நதி சிற்றாறு இதனுடன் இணைவதாலும். இப்பெயர். உமையே கிழவியாக வீற்றிருக்க, சுந்தரர் பாட்டிற்கு மகிழ்ந்து தன் பிள்ளைகளை ஈடு காட்டி இறைவன் பொன் வாங்கி சுந்தரருக்கு கொடுத்தார். நாயன்மார்களின் மூர்த்தத்தின் கீழ் நாடு, மரபு, காலம், திரு நட்சத்திரம் விவரங்கள் உள்ளன. இதே போல் திருமுதுகுன்றத்திலும் (விருத்தாசலம்) உள்ளது.	மதுரபாஷிணி உடனுறை கல்யாணவிகிர்தேஸ்வரர் காலை 05.30 மாலை 04.00 விரவிச்சந்திர குருக்கள் 04320 - 238442 9943527792
ஆதிசேடனுக்கும் வாயுவுக்கும் நடந்த போட்டியில் ஆதிசேடன் சுற்றிய மேருவின் ஆயிரம் சிகரங்களுள் ஒன்று, 5 மணிகளாக உடைப்பட்டுச் சிதறியது. அவற்றுள் சிவப்பு மணி திருவண்ணாமலையாவும், மரகதம் ஈங்கோய் மலையாகவும், மாணிக்கம் திருவாட் போக்கியாகவும், நீலம் பொதிகையாகவும், வைரம் கொடு முடியாகவும் ஆயின. மேருமலையின் ஒரு சிகரம் இங்கு விழுந்ததால் இப்பெயர். சிகர வடிவில் குட்டையான சிவலிங்கம். அகத்தியர் தழுவிய விரல் தழும்புபோல் உள்ளது. பாண்டிய மன்னனின் விரல் வளர்ந்து குறை தீர்த்த தலம். அகத்தியர், பரத்வாசர் வழிபட்டது. சுந்தர மூர்த்தி நமச்சிவாயத் திருப்பதிகம் பாடிய இடம். பிரம்மா, விஷ்ணு சிவனின் தரிசனம் இங்கு கிடைக்கிறது. தட்சிணாமூர்த்தியின் கீழ் முயலகன் வடிவமும்	மதுரபாஷிணி உடனுறை மகுடேஸ்வரர் 06.00 - 12.30 03.00 - 08.00 செயல் அலுவலர் 04204-222375

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
265	கருவூர் கரூர் பசுபதீஸ்வரர் திருக்கோயில் கரூர் கரூர் மாவட்டம்-639001	திருச்சி ஈரோடு இருப்புப்பாதையில் உள்ளது. சென்னை, சேலம், திருச்சி, ஈரோடு முதலிய ஊர்களிலிருந்து பேருந்துகள் உள்ளது. தான்தோன்றிமலை கல்யாண வெங்கடரமண சுவாமி கோயில் 5 கிமீ தூரத்தில் உள்ளது. குளித்தலையிலிருந்து 40 கிமீ.

பஞ்ச ஆரண்யம்

1.பத்ரிகாரணியம் - இலந்தைக்காடு - திருவெண்பாக்கம்
2.வம்சாரணியம் - மூங்கிற்காடு - திருப்பாசூர்
3.வடாரணியம் - ஆலங்காடு - திருவாலங்காடு
4.வீக்ஷாரணியம் - ஈக்காடு - திருவெவ்வுளூர்
5.நைமிசாரணியம் - தருப்பைக்காடு - திருவிற்கோலம்


காசிக்கு சமமானவை

1. திருவாஞ்சியம் 2. திருச்சாய்காடு
3. திருவிடைமருதூர் 4. மாயூரம்
5. திருவையாறு 6. திருவெண்காடு

266	திருஅஞ்சைக்களம் ஸ்ரீ மஹாதேவ சுவாமி திருக்கோயில் ஸ்ரீ வாஞ்சிகுளம் அஞ்சல் வழி கொடுங்கநல்லூர் கேரளம் திருச்சூர் மாவட்டம் - 680664	சென்னை கொச்சி இருப்புப்பாதையில் இரிஞ்சாலகுடா இறங்கி அங்கிருந்து 8 கிமீ தொலைவில் கோவில். திருச்சூரிலிருந்து 32 கிமீ கோயில். கொடுங்கோளூர் பக்கத்தில் 1.5 கிமீ தூரத்தில் உள்ளது.

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
சனகாதி நால்வருக்குப் பதிலாக ஒருவரின் வடிவமும் உள்ளது. வன்னி மரத்தை தன் முகமாக பெற்றதால் பிரம்மாவுக்கு மூன்று முகம். பெருமாள் வீரநாராயணர். துலா ஸ்நானம் கங்கா ஸ்நானத்திற்கு இணையானது.	
புகழ்ச்சோழ நாயனார் ஆண்ட பதி. எறிபத்த நாயனார் பிறந்த ஊர். சிவகாமியாண்டார் வாழ்ந்து தொண்டு செய்த பதி. திருவிசைப் பாடல் இயற்றிய கருவூர்த்தேவரின் அவதாரத் தலம். மூலவர் சுயம்பு சற்று சாய்வாக உள்ளார் கருவூராருக்காக சாய்ந்து கொடுத்ததாகச் செய்தி. சோழரின் 5 தலைநகரங்களுள் ஒன்று. கோயில் கல்தூண் ஒன்றில் ஒரு சக்கரம் உள்ளது. இக்கோயில் காலம் பற்றியது எனச் சிலர் கூறும் போதும் பொருள் தெரியவில்லை. மூலவர் மீது மாட்டுக்குளம்பு பட்டது போல இரு பக்கமும் பள்ளங்கள் உள்ளன. சொரசொரப்பாகவும் உள்ளது. 2 அம்பாள் சந்நிதி உள்ளது. அலங்கார நாயகி ஆதியானது. மாலிக்கபூர் காலத்தில் படையெடுப்பில் மண்ணில் மறைந்துபோன அம்பாள் சிலைக்கு வேறு ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும் பின்னர் கிடைத்துவிட்டதால் 2 அம்பாள் சந்நிதி என்கின்றனர். ஆண்டவார் கோயிலூர் என்ற ஊரில் ஒரு பெண் ஆண்டாளைப்போல் இறைவனை வேண்டி வணங்கியதாகவும் மணம்கொண்டதாகவும் அதனால் சுவாமி திருவிழாவில் ஒரு நாள் அலங்காரவல்லிக்காக அவ்வூருக்குச் சென்று வருகிறார் என்கின்றனர்.	கிருபாநாயகி உடனுறை பசுபதீஸ்வரர் 06.00 - 12.30 04.00 - 08.30 செயல் அலுவலர் (ராமநாதன்) 04324-262010, 99940 12627
பரசுராமர் தாயைக்கொன்ற பாவம் தீர வழிபட்ட தலம். கேரள பாணிக்கோயில். துவஜஸ்தம்பத்தில் அஷ்ட வித்யேஸ்வரர்கள் உருவம் உள்ளது. வீதியில் உள்ள மேடையை யானை வந்த மேடை என்கின்றனர். கயிலாயத்திலிருந்து வெள்ளை யானை வந்து சுந்தரரை கயிலாயத்திற்கு ஏற்றிச் சென்றது என்பது வரலாறு. கயிலை சென்ற ஆடி சுவாதி அன்று சேக்கிழார் கூட்டத்தார்	உமையம்மை உடனுறை அஞ்சைக்களத்தீஸ்வரர் 05.00 - 10.00 05.00 - 08.00 கொச்சி தேவஸ்வம் போர்டு, ரவுண்டு நார்த், திருச்சூர்-1 (0487-2331124), சுற்றுலா மையம்

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
267	திருகோகர்ணம் மகாபலேஸ்வரர் திருக்கோயில் திருக்கோகர்ணம் அஞ்சல் கர்நாடகா-576234	பெங்களூரிலிருந்து நேரடி பஸ் உள்ளது. சென்னையிலிருந்து ரயிலில் செல்ல குண்டக்கல் வழியாக ஹூப்ளி சென்று அங்கிருந்து பேருந்தில் செல்லலாம். மங்களூரிலிருந்து பேருந்துகள் செல்கின்றன. நடுவில் முர்டேஷ்வர் என்ற ஊரில் வானளாவ உயர்ந்த சிவனை கடலோரப் பிரதேசத்தில் தரிசிக்கலாம். மங்களூரிலிருந்து செல்லும் போது உடுப்பி, ஆனேகுட்டே (விநாயகர்), முர்டேஸ்வர் கடலருகே சிவனை தரிசிக்கலாம்.



தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
கோவையிலிருந்து வந்து சிறப்பு விழா நடத்துகின்றனர்	(0487-2320800) நிர்வாக அதிகாரி 0480 - 2812061
கோ-பசு, கர்ணம் - காது சுவாமி பசுவின் காது போலக் குழைந்து காணப்படுவதால் இப்பெயர். அப்பர் அங்கமாலையில் பாடியுள்ளார். இராவணன் இலங்கையில் பிரதிஷ்டை செய்ய கயிலையிலிருந்து சிவபெருமானிடம் பெற்ற லிங்கத்தை இளைப்பாற எண்ணி தரையில் வைக்க இத்தலத்திலேயே வீற்றிருக்க திருவுள்ளம் கொண்டதால் தங்கிவிட்டார். இராவணன் வலிமையனைத்தையும் பெற்று எடுக்க முயன்ற போது பசு காது போல் ஆனது. இவ்வூர் வழக்கப்படி தொட்டு நீராடி மலர் சூட்டி வழிபடலாம். பிரமன், அகத்தியர், காமதேனு, மாக்கண்டேயர், சரஸ்வதி, வசிட்டர் , இராவணன், நாகராசன் வழிபட்ட தலம். கொட்டைப்பாக்கு அளவில் சிவலிங்கபாணம். கோகர்ப்பக்குகை கண்டு களிக்கத்தக்கது. 33 தீர்த்தங்கள் உள்ளன. பிராண லிங்கம் கீழே வைக்கப்படக் காரணமாய் இருந்தவர் விநாயகர். நாரதர் வருணனை சிறுநீராக இராவணனுக்கு வரவழைத்து விநாயகர் துணை கொண்டு லிங்கத்தை கீழே இறக்க வைத்தார். ஏனெனில் இராவணன் இந்த லிங்கத்தை இலங்கையில் பிரதிஷ்டை செய்தால் இலங்கைக்கு அழிவில்லை என்ற வரததை சிவபெருமான் அளித்து இருந்தார். அவர் மூன்று முறை அழைத்தும் இராவணன் வராததால் விநாயகர் லிங்கத்தைக் கீழே வைத்தார். தலையில் மூன்று முறை குட்டிக்கொண்டு இராவணன் விநாயகரை வழிபட்டான். முதலில் கோடி தீர்த்தத்தில் நீராடி, பின்பு கடல் நீராடி, பிண்ட தர்ப்பணம் செய்து மீண்டும் நீராடி சிவனை வழிபட வேண்டும் என்பது ஐதீகம். அமாவாசை விசேஷம். பாஸ்கர தலங்களில் ஒன்று மற்றவை காசி, புஷ்பகிரி, காஞ்சி, ஸ்ரீசைலம், சேது, கேதாரம்.	கோகர்ணேஸ்வரி உடனுறை மஹாபலேஸ்வரர் 06.00 - 12.30 05.00 - 08.15 P.V. தீக்ஷித், B.V. தீக்ஷித், தேர் வீதி கோகர்ணம் 08386- 257167, 08386 - 256 167

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
268	திருப்பருப்பதம் (ஸ்ரீ சைலம்) நிர்வாக அதிகாரி, துணை ஆணையர் ஸ்ரீ மல்லிகார்ஜுனேஸ்வரர் திருக்கோயில் ஸ்ரீ சைலம் கர்னூல் மாவட்டம் ஆந்திர மாநிலம் - 518100	கர்னூல் மாவட்டத்தில் நந்தியாலுக்கு அருகில் உள்ளது. ஹைதராபாத்திலிருந்தும் செல்லலாம்.தெனாலியிலிருந்து 250 கி.மீ. (விஜயவாடா அருகில் 27 கி.மீல் தெனாலி). விஜயவாடாவிலிருந்து 18 கி.மீ தொலைவில் மங்களகிரி பானகால நரசிம்மர் கோயில்.
269	இந்திரநீலபருப்பதம் இந்திரநீலப்பருப்பதம் பத்ரிநாத் அடிவாரம் பத்ரிநாத் உத்திராஞ்சல் மாநிலம்	பத்ரிநாத்திலிருந்து தரிசிக்க வேண்டிய தலம்.
270	அநேகதங்காபதம் அநேகதங்கபாதம் வழி ஹரித்வார் கேதார்நாத் வழி கௌரிகுண்டம் உத்திராஞ்சல் மாநிலம்	ஹரித்வாரிலிருந்து கேதார்நாத் செல்லும் வழியில் கௌரிகுண்டம் வரை பேருந்துசெல்லும். பின் குதிரைப்பயணம்.
271	திருக்கேதாரம் கேதாரேஸ்வரர் திருக்கோயில் கேதார்நாத் உத்திராஞ்சல் மாநிலம்	ஹரித்வாரிலிருந்து 250 கி.மீ. அக்டோபர் முதல் ஏப்ரல் வரை பனி மூட்டத்தால் கோயில் பூட்டப் பட்டிருக்கும். பருவ காலம் அறிந்து நடை திறக்கும் காலம் அறிந்து செல்ல வேண்டும். கேதார் செல்லும் வழியில் விஷ்ணுப் பிரயாகை, பாண்டுகேஸ்வர்,

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
ஜோதிர்லிங்கத்தில் ஒன்று. சக்தி பீடத்தில் பிரமராம்பாள் பீடம். அர்ச்சுனன்தலங்களில் ஒன்று(மருத மரம்). மற்ற இடங்கள் திருவிடை மருதூர் திருப்புடைமருதூர் (அம்பாசமுத்திரம் அருகில்) சிலாத முனிவர் தவம் செய்தது. சிவனைச் சுமக்கும் ஆற்றலை நந்திபெற்ற இடம். அவரே இங்கு மலையாக இருக்கிறார். 3 பாடல் பெற்ற ஜோதிர்லிங்கங்களில் ஒன்று. மற்றவை இராமேஸ்வரம், திருக்கேதாரம். சம்பந்தரும், சுந்தரரும் காளத்தியைத் தொழுத பின்னர் அங்கிருந்தே வடக்கு நோக்கி பாடினர். அப்பர் கயிலாய யாத்திரையில் எழுந்தருளிப்பாடினார். கிருஷ்ணா நதிக்கரையில் உள்ளது.இதுவே பாதாள கங்கை. 8 சிகரங்கள் உள்ளன. 9 கோயில்களும் உள்ளன.	பிரமராம்பிகை உடனுறை மல்லிகார்ச்சுனர் காலை 5 முதல் இரவு 10 மணி வரை தரிசனம். அலுவலகம் 08524 - 287130, ரூம் புக்கிங் 08524-287 135,நிர்வாகம (08524-287159)
இந்திரனால் வழிபட்ட இமயமலைச்சாரல் தலம். சம்பந்தர் பாடியது. திருக்காளத்திக்குப்பிறகு அங்கிருந்தே பாடினார். பத்ரிநாத் கோயிலை இரவு அடைந்து அடிவாரத்தில் இரவு தங்கி விடியற்காலையில் 4 மணியளவில் எழுந்து பார்த்தால் பருப்பதத்தைப்பார்க்கலாம். நேரம் ஆக ஆக வண்ணம் மாறும். பனி மற்றும் மேக மூட்டம் இருப்பதால் கொடுப்பினை இருந்தால் தரிசனம் பெறலாம்.	நீலாம்பிகை உடனுறை நீலாசலநாதர்
அம்பிகை தவம் செய்த இடம். இங்குள்ள வெந்நீர் ஊற்றில் அவசியம் நீராட வேண்டும். சூரியனும் சந்திரனும் வழிபட்ட தலம். திருக்காளத்தியை வணங்கிய பின்பு அங்கிருந்தே சம்பந்தர் பாடியது.	மனோன்மணி உடனுறை அருள்மன்னேஸ்வரர்
6 மாத காலம் குளிர்காலத்தில் மூடியிருக்கும். ஜோதிர்லிங்க தலம்.பிருங்கி முனிவர் பொருட்டு உமையம்மை இறைவனை வழிபட்டுஇடப்பாகம் பெற்ற தலம். ஹரித்வாரிலிருந்து 250 கிமீ. 14 கிமீ மலையேறிச்செல்ல வேண்டும் குதிரையிலும், டோலியிலும் செல்லலாம். சம்பந்தர், சுந்தரர் திருக்காளத்தியில் இருந்த படியே பாடியது. கோயிலின் பின்புறம்	கேதாரகௌரி உடனுறை கேதாரேஸ்வரர்

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
		ஹரித்வார் மற்றும் பத்ரிநாத் பார்க்க வேண்டிய தலங்கள்.
272	நொடித்தான்மலை (கயிலாயம்) மானசரோவர் திபெத் நாடு இமயமலை	திபெத்தில் மேற்குப்பக்கத்தில் உள்ளது.

கைலாய யாத்திரை

திபெத் நாட்டின் மேற்கில் 22028 அடி உயரத்தில் திருக்கைலாயம் உள்ளது. ஆண்டொன்றுக்கு 200-300 பேர்கள் ஜுன் முதல் செப்டம்பர் வரை செல்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஜனவரியில் இந்திய வெளியுறுவுத் துறையினர் வெளியீட்டின் வாயிலாக விண்ணப்பம் செய்து தேர்வு செய்யப்படுவோர் குழுக்களாக உடல் நலம் சோதிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்படுவர். டெல்லி, மொராதாபாத், ராம்பூர், ருத்திரப்பூர் வழியாக தனக்பூர் என்னும் இமயத்தின் அடிவாரத்தை அடைய வேண்டும். மலையேற்றம் மூலம் சாம்பவாட், பித்தோர்காட் வழியாக தார்சுலா அடைய வேண்டும். காளத்தி நதியின் மேற்கரை இந்தியா மற்றும் கீழ்க்கரை நேபாளம் ஆகும். தார்சுலாவிலிருந்து தவாகாட் வரை 60 கிமீ சமதரைப் பேருந்துப் பயணம். தவாகாட்டிலிருந்து மலையேற்றம் நடைவழி 120 கிமீ. பாங்கு, சிக்கா, ஜிப்டி, மால்பா, புத்தி, குஞ்சி, கலாபானி வழியாக இந்திய எல்லை நபிதால் சேர வேண்டும். பின்னர் சீன எல்லையான லிபுவுள் சென்று தார்ச்சனை அடைய வேண்டும். பின்னர் 55 கிமீ மலையை வலம் வர வேண்டும். 3 நாட்கள் பிடிக்கும்.

273	திருக்கோணமலை திருக்கோணமலை இரயில் நிலையம் அருகில் இலங்கை	ரயில் மூலம் இலங்கை நாட்டுக் கொழும்பிலிருந்தும் யாழ்பாணத்திலிருந்தும் செல்லலாம். திருக்கோணமலை ரயில் நிலையத்திலிருந்து நடந்து போகலாம்
274	திருக்கேதீச்சரம் வடக்கு இலங்கை மாந்தை	ராமேஸ்வரம் தலைமன்னார் கப்பல் வழி வந்துதலை

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
வெள்ளிப்பனி மலையாகக் காணக்கிடைக்காத காட்சி இருக்கிறது.	
சிவபெருமான் அம்பிகையோடு உடனாகி எழுந்தருளியுள்ள மலையாகும்.இமய மலையின் வடக்கில் திபெத்தில் மேற்கில் உள்ளது. இயற்கையான கோயிலமைப்பில் பனி மூடிய சிவலிங்கமாகக்காட்சி எப்பக்கத்திலிருந்தும் எவ்வண்ணமாக நோக்கினும் அவ்வண்ணமாகத் தெரியும். மலைச்சிகரம் தென்திசை நோக்கியுள்ளது. 29 மைல் சுற்றளவு. இந்தியாவில் இமயம் முதல் குமரி வரை எத்தனை வகையான கோபுரங்கள் உள்ளனவோ அத்தனை மாதிரி கோபுரங்களும் காணக்கிடக்கின்றன. அப்பர் இந்த யாத்திரையின் பயனாகவே ஐயாற்றில் கயிலைத்தரிசனம் பெற்றார். சுந்தரர் ஐராவதத்தில் கைலை சென்ற போது பாடினார். வருணனால் இப்பதிகம் திருஅஞ்சைக்களத்தில் சேர்ப்பிக்கப்பெற்று உலகிற்குக் கிடைத்தது. கயிலாய யாத்திரைக்கு இந்திய அரசு ஆண்டு தோறும் ஏற்பாடு செய்கிறது. சீன அரசும் வசதி செய்கிறது.	கொடியொன்றுடையார் உடனுறை கயிலைமலையார்.
3287 ஆண்டுப்பழமை வாய்ந்த தலம். திரிகூடம் என்பது மற்றொரு பெயர்.நகர சபையார் கிணறு தோண்ட முயன்ற போது மூன்றடி தோண்டிய நிலையில் இறைவன் கிடைக்கப்பெற்றார். ஆங்கிலேயரின் கெடுபிடியின்காரணத்தால் வழிபாட்டு அனுமதி பெற்று மலைப்பூசை ஆகாச வெளியில்இன்றும் நடைபெறுகிறது. 1624 போர்த்துகீயர் பாழ் செய்த கோயில். அதனை அருணகிரிநாதர் விளக்கியுள்ளார். அந்த கோபுரத்தழகைச்சிதைத்த தளபதி ஓவியம் வல்லானின் துணை கொண்டு படம் வரைந்த பிறகே சிதைத்தான். இந்த சித்திரம் லிஸ்பன் நகரில் இன்றும் உள்ளது.	மாதுமையாள் உடனுறை கோணேஸ்வரர்
கேது பூசித்ததலம். பழைய கேதீஸ்வரம் 16-ஆம் நூற்றாண்டு புயலில் சிதைந்தது.	கௌரியம்பாள் உடனுறை


எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
	மாந்தோட்ட நகர் இலங்கை	மன்னாரிலிருந்து இங்கே வரலாம். கொழும்பிலிருந்து மன்னார் வரை புகைவண்டியில் வந்து ஊரை அடையலாம்.
275	திருவிடைவாய் புண்ணியகோடிநாதர் திருக்கோயில் திருவிடைவாசல் திருவிடைவாசல் அஞ்சல் அத்திக்கடை எஸ்.ஒ. குடவாசல் தாலுகா திருவாரூர் மாவட்டம் - 613702	தஞ்சை மாவட்டம் கொரடாச்சேரியிலிருந்து கூத்தாநல்லூர் செல்லும் பாதையில் வெண்ண வாசலில் இருந்து 2 கி.மீ.தூரம் கிழக்கு பாண்டவை ஆறு தென்கரை அருகே ஊர்.
276	திருக்கிளியன்னவூர் கிளியனூர் திருக்கிளியன்னவூர் திருக்கோயில் கிளியனூர் போஸ்ட், வானூர் தாலுக்கா விழுப்புரம் மாவட்டம் -604102	புதிதாகக் கண்டெடுக்கப்பட்ட தலம். கிளியனூர் என்கிற ஊர் தண்டிவனத்திலிருந்து பாண்டி சாலையில் தென் கிழக்கே 18 கி.மீ தூரத்தில் உள்ளது.


தேவாரப் பதிகத் தொகைப்படி தலங்கள்

தல எண்ணிக்கை	பதிகங்கள்	மொத்தம்
153	ஒரே பதிகம்	153
49	2	98
28	3	84
11	4	44
7	5	35
7	6	42
4	7	28
4	8	32
11		233
274		749

சீர்காழி-71, திருவாரூர் 34, வீழிமிழலை 24, திருவையாறு 19, திருவதிகை18, திருவிடைமருதூர் மற்றும் கச்சியேகம்பம் 12, திருஆலவாய், சிதம்பரம் மற்றும் முதுகுன்றம்11, மறைக்காடு10. (கடைசியாக கிடைக்கப்பெற்ற சம்பந்தர் பாடிய 2 தலங்கள் நீங்கலாக.)

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
இராசேந்திர சோழன்பின் சுந்தரபாண்டியன் திருப்பணி செய்த தலம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் முயற்சியில் 1872 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டது	திருக்கேதீஸ்வரர்
புதிதாகக் கிடைக்கப்பெற்ற தலம் (1917). சம்பந்தர் பாடியது.சிறிய கோயில். அற்புதமான சிற்ப வேலைகள் நிறைந்த கோயில். புண்ணியகோடி தீர்த்தம் உள்ளது. குருக்கள் முகவரி- சிவன்சன்னிதி தெரு, களத்தூர், கொரடாச்சேரி - 613703. குருக்கள் இங்கிருந்து தான் வர வேண்டும்.	அபிராமி உடனுறை புண்ணியகோடிநாதர் 10.30 முதல் 12.00 வரை ஒரு கால பூஜை வி.பாலசுப்ரமண்ய குருக்கள், S.வைத்தியநாத குருக்கள் 99436 66180
கிள்ளி என்பது பழங்கால சோழர் பெயர். அக்காலத்தில் கிள்ளியநல்லூர்என்பது மருவி கிளியனூர் ஆனது. சம்பந்தர் காலத்தில் செங்கல் கோயிலாக இருந்தது இடைக்கால சோழர் காலத்தில் கற்கோயிலானது. அகத்திய முனிவருக்கு அருள்பாலித்த பதி. ராகு கேது கிரகங்களுக்கும் அருள்பாலித்த இடம். காளவ மகரிஷி தன்னுடைய இரண்டு பெண் குழந்தைகளின் தீராத பிணிக்காக பல காலம் பூஜித்து தீராத பிணி தீர்ந்ததாக ஐதீகம். சுகப்பிரம்ம ரிஷி பூஜித்ததால் சுக(கிளி) புரி. அகத்தியர் பிரதிஷ்டை செய்த சுவாமி. மகாசிவராத்திரி அர்த்தஜாமத்தில் அம்பாளுக்கு எதிரே உள்ள நந்தி அம்பாளை பூஜை செய்வதாக வரலாறு. சுக முனிவருக்கு குன்ம வியாதி (வயிற்று வலி) தீர்த்த தலம். பாலய சுவாமிகளும் சிதம்பர சுவாமிகளும் வரும்போது நரை மூதாட்டியின் வேண்டு கோளுக்கிணங்க புற்கை அமுதை புசித்து, ஓராண்டு இருந்து ஆலய கர்ப்பக்கிரகம் கட்ட முற்பட்ட போது இம்மூதாட்டி 1 பொன் கொடுக்க, உள்ளம் உவந்து பொன்னை ஏற்று நெற்றியிலும், சிரசிலும், கண்ணிலும் வைத்து ஆனந்தமுற்று கர்ப்பக் கிரகத்தின் சிகர வேலைக்கு உபயோகித்தனர். இம்மூதாட்டியின் சமாதியும், இவர் அனுக்கிரகம் செய்த ஏகாலி பெண்ணின் சமாதியும் இன்றும் ஆராதிக்கப்படுகிறது.	அகிலாண்டேஸ்வரி உடனுறை ஸ்ரீ அகத்தீஸ்வரர் 09.00 - 12.00 05.30 - 07.30 பி. ஹரிஹர குருக்கள் 04147 - 235221 9976440754


கும்பகோணம்
சக்திமுற்றம்
பட்டீஸ்வரம்
திருவிசயமங்கை
திருவைகாவூர்
நல்லூர்
பாபநாசம்
திருப்பாலத்துறை
திருக்கருக்காவூர்
கொட்டையூர்
சுவாமிமலை
ஆவூர்
திருவலஞ்சுழி
திருப்புறம்பியம்
திருஇன்னம்பர்
திருவாய்பாடி
திருவியலூர்
சேங்கனூர்
திருப்பனந்தாள்
சென்னை
திருச்சி
திட்டை
தஞ்சாவூர்
சாலியமங்கலம்
கருவாய்க்கரை
கருக்குடி
கலையநல்லூர்
சிவபுரம்
மருதாநல்லூர்
வைகல்மாடக்கோவில்
தாராசுரம்
பழையாறைவடதளி
கருவிலி
பேணுபெருந்துறை
நாச்சியார்கோயில்
திருநல்லம்
அரிசிற்கரைபுத்தூர்
திருநரையூர்
திருச்சேறை
நாலூர்மயானம்
அய்யாவாடி
உப்பிலியப்பன்கோயில்
திருநாகேஸ்வரம்
சூரியனார்கோயில்
திருமங்கலக்குடி
திருக்கோடிக்காவல்
கஞ்சனூர்
ஆடுதுறை
திருமணஞ்சேரி
குத்தாலம்
மாயவரம்
எஸ். புதூர்
ஆலங்குடி
பேரளம்
கொல்லுமாங்குடி
திருவாரூர்
மன்னார்குடி
நீடாமங்கலம்



நவ கைலாய திருத்தலங்கள் வரைபடம்
பாபநாசம் (சூரியன்) ①
30 km
சேர்மா தேவி கோவில் (சந்திரன்) ②
12 Km
③ கல்லூர் (செவ்வாய்)
14 Km
④ குன்னத்தூர் (ராகு)
25 Km
முறப்பநாடு கோவில் (குரு) ⑤
60 Km
தூத்துக்குடி
⑥ சேர்ந்தபூமங்களம் (சுக்கிரன்)
முறப்பநாடு
சேர்மாதேவி
55 Km
ஸ்ரீவைகுண்டம் (சனி) ⑨
30 Km
10 Km
மணத்தி (கேது)
தென்திருப்பேரை ⑦
(புதன்) ⑧
6 Km
20 Km

திருவாசக (1-2) மற்றும் திருவிசைப்பா திருப்பல்லாண்டு தலங்கள் (3-10)

1	ஆவுடையார் கோயில், திருப்பெருந்துறை ஆத்மநாதசுவாமி திருக்கோயில் ஆவுடையார் கோயில் மற்றும் போஸ்ட் ஆவுடையார்கோயில் வட்டம் புதுக்கோட்டை மாவட்டம் 614618	அறந்தாங்கி. மீமிசல் பாதையில், அறந்தாங்கியிலிருந்து 14 கிமீ தொலைவில் ஊர். பொதுவாக ஆவுடையார் கோயில் என்று வழங்கப்படுகிறது. திருச்சி-புதுக்கோட்டை, மதுரை-திருப்புத்தூர்-காரைக்குடி, தஞ்சை-பட்டுக்கோட்டை ஆகிய வழிகளில் அறந்தாங்கி செல்லும் பாதையில் ஊர்.

திருவிசைப்பா திருப்பல்லாண்டு தலங்கள் சிவபெருமானின் மேனிச் சிறப்பு, அடியார்க்கு அருளல், வைச சமய சித்தாந்த கருத்துக்கள் கொண்டவை.

2	உத்திரகோசமங்கை மங்களேசுவரர் திருக்கோயில் உத்திரகோசமங்கை மற்றும் போஸ்ட் இராமநாதபுரம் வட்டம் மற்றும் மாவட்டம் 623533	மதுரை - இராமநாதபுரம் சாலையில் பரமக்குடி, சத்திரக்குடி தாண்டி வலப்புறம் செல்லும் தூத்துக்குடி- திருச்செந்தூர் பாதையில் உத்திரகோசமங்கை, லெவல் க்ராஸிங் தாண்டி 7 கிமீ சென்றால் ஊர். இந்த ஊர் இராமநாதபுரத்திற்கு சுமார் 10 கிமீ முன்பாகவே உள்ளது.

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
ஆத்ம லிங்க வடிவில் அருவ நிலையில் இறைவன். இக்கோவிலில் அர்ச்சகர் நம்பியார், குருக்கள் , சைவப்பிள்ளை என்று மூன்று வகையினர் உள்ளனர். முறைப்படி பணி செய்கிறார்கள். தெற்குப்பார்த்த கோவில். நந்தி, கொடிமரம் இல்லை. சுவாமி அம்பாளுக்கு உருவம் இல்லை. பரிகார தலம். மாணிக்கவாசகருக்கு சிவபெருமான் உபதேசம் செய்த கோவில். ஆதலால் தெற்கு நோக்கி சிவபெருமான். அரிமர்த்தன பாண்டியன் சொல்படி அமைச்சர் வாதவூரார் கீழ்க் கடற்கரைக்கு குதிரை வாங்க சென்றவர், குருந்த மரத்தின் கீழ் இறைவன் ஆட்கொண்டு மாணிக்கவாசகராக மாறினார். இறைவன் ஆணைப்படி அவரே கோயில் கட்டியதாக வரலாறு. கொடுங்கைகளின் அழகு பெற்ற கோயில் சிற்பங்கள் சிறிய மடிப்புகளாகக் இழைக்கப்பட்ட கருங்கற்கள் விசேஷம். ஸ்தபதிகள் கோயில் கட்டும்போது தங்கள் திறமைக்கு பங்கம் வரக்கூடாது என எண்ணி, கொடுங்கைகள் நீங்கலாக வேலை பார்ப்போம் என்று ஒப்பந்தம் செய்வார்களாம். வீடுபேறு பெற பெரும் துறையாக விளங்குவதால் இப்பெயர்.	யோகாம்பாள் உடனுறை ஆத்மநாதசுவாமி 06.00 - 12.30 04.00 - 08.30 நம்பியார், குருக்கள், சைவப்பிள்ளை என மூன்று வகையினார் பணி பார்ப்பார்கள் கண்கானிப்பாளர் 04371 - 233301 மாணிக்க வாசகர் பாடிய தலம்.
மங்களநாதர், மங்களேஸ்வரி மற்றும் மரகத நடராஜர். ஐந்தரை அடி உயரமுள்ள ஒரே கல்லினால் (மரகதப்பச்சை) ஆன மரகத நடராஜர் வருடம் ஒரு முறைதான் அபிஷேகம். ஆருத்ரா தரிசனம், மார்கழி திருவாதிரை மட்டும் மற்ற நாட்களில் ஸ்படிக லிங்க பூஜை மட்டும் தான். உச்சி கால வேளையில் ஸ்படிக மற்றும் மரகத லிங்கத்திற்கும் நடைபெறும் அபிஷேகம் மாணிக்கவாசகரே செய்வதாக ஐதீகம். இவர் சடையுடன் தனிச்சன்னிதியில் காட்சி தருகிறார். சிவபெருமான் பார்வதிக்கு வேத மந்திரத்தை உபதேசித்துவிட்டுத் திருப்பிக்கேட்கும் போது அன்னை மறந்ததால் மண்ணுலகில் புகலூரில் பிறந்து பின் அந்தணராக சிவன் மணந்தார். மணந்தபின் மீண்டும் வேத மந்திரத்தை உபதேசித்தாராம். உத்திரம்-பதில், கோசம் -	மங்களேஸ்வரி உடனுறை மங்களநாதர் மரகத நடராஜர் - இரத்தின சபாபதி மற்றும் ஆதி சிதம்பரேசர். 06.00 - 12.30 04.00 - 08.30 பேஷ்கார் கோ. சேகர் 04567-221213 இராமநாதபுரம் திவான் சமஸ்தானம் (தலைமை அலுவலகம்), சேகர்- 04567-256333, 9976228866 மாணிக்க வாசகர் பாடிய தலம்.

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
3	கங்கைகொண்டசோழபுரம் கங்கைகொண்ட சோழேஸ்வரர் திருக்கோயில் கங்கைகொண்ட சோழபுரம் மற்றும் போஸ்ட் உடையார்பாளையம் வட்டம் திருச்சி மாவட்டம் 612901	ஜெயங்கொண்ட சோழபுரத்திலிருந்து சுமார் 10 கிமீ தொலைவில் ஊர். சென்னை- பண்ருட்டி-சேத்தியாத்தோப்பு பாதையில் மீன்சுருட்டி அடைந்து, திருச்சிக்குப் பிரியும் சாலையில் 2 கிமீல் ஊர். கும்பகோணத்திலிருந்தும் கல்லணைப் பாதையிலும் (லோயர் அணைக்கட்டு) வரலாம்.
4	திருவிடைக்கழி சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் திருவிடைக்கழி அஞ்சல் தரங்கம்பாடி வட்டம் நாகப்பட்டணம் மாவட்டம் 609310	மயிலாடுதுறையிலிருந்து தில்லையாடி சென்று, வள்ளியம்மை பெயரில் அமைந்த வளைவுக்குள் சென்று பின் 3 கிமீல் ஊர்.

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
வேதம் என்ற பொருளில் ஊரின் பெயர். வெளிப்பிரகாரத்தில் ஆதி சிதம்பரம் என்ற தனிக்கோயிலில் பதஞ்சலிக்கும், வியாக்ர பாதருக்கும், காரைக்காலம்மையாருக்கும் காட்சி கொடுத்தார். இங்கிருந்துதான் நடராஜர் சிதம்பரத்தில் ஆடச்சென்றதாகக் கூறுவர். இதற்குரிய சுரங்கப்பாதையும் இருந்ததாம். மாணிக்கவாசகர் இந்தத்தலத்தின் மகிமைகளைக் கூறுகிறார். பிருகு, சாண்டில்யர், அக்கினி வழிபட்ட தலம். பல்லாயிரம் ஆண்டு கடந்து இலந்தை மரம் உள்ளது	
இராஜேந்திர சோழன் தந்தையைப்போல் பெரிய (60 அடி சுற்றளவுள்ள ஆவுடையார், 13 அடி உயரம்) கொண்டு சிவலிங்கம் அமைத்த தலம். பெருத்த மழையினால் கொள்ளிடத்தில் ஏற்படும் வெள்ளம், தஞ்சையைத் தலைநகராகக் கொண்டதால், தில்லை நடராஜரை வழிபட தடையாக உள்ளது என எண்ணி, அவன் படையினர் வடநாட்டில் போர் புரிந்து கங்கை நீர் கொணர்ந்து இவ்விடத்தைப் புனிதப்படுத்தி கோயில் அமைத்தான். கலிங்கத்துப் பரணி பாடப்பட்ட ஊர். சேக்கிழார் பெரிய புராணம் பாட உந்துதல் தந்த ஊர். மூலவர் அடியில் சந்திரகாந்தக்கல் பதிக்கப்பட்டு இருப்பதால் வேனிற்காலத்தில் மூலவர் குளிர்ச்சியாகவும் பனிக்காலத்தில் வெப்பமாகவும் இருப்பதாகக் கூறப்படுகிறது நவக்கிரகங்கள் ஒரே வரிசையில் உள்ளன.	பெரியநாயகி உடனுறை பிரகதீஸ்வரர் 06.00 - 12.00 04.00 - 08.00 வி.தியாகராஜ குருக்கள் 9443368575 கருவூர்த்தேவர் திருவிசைப்பா பாடிய தலம்.
முருகன் தலமாக விளங்குகிறது. தெய்வயானை இறைவனிடம் திருப்பரங்குன்றம் விடை கேட்டதாலும், முருகன் இரணியாசுரனைக் கொன்ற பழி கழித்ததால் விடைக்கழி எனப் பெயர். சேந்தனார் முக்தித் தலம். பிரதானமாக முருகப்பெருமானும், உள்ளடங்கி சிவலிங்கமும் உள்ளது. மலைகளில் மட்டுமே வளரும் குராமரம் இங்கு இருப்பது அபூர்வம் என்றும் முருகப் பெருமான் இங்கு அமர்ந்து தியானம் செய்ததால் இங்கு தியானம் செய்வது விசேஷம்.	காமேஸ்வரி உடனுறை காமேஸ்வரர் 06.30-11.30 05.00-07.30 பாலசுப்பிரமணிய சிவாச்சாரியார் கணேசன் (9442012133) திருக்கடவூர் மயானம் குருக்கள் சேந்தனாரின் திருவிசைப்பா பாடல் பெற்ற தலம்.

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
5	இராஜராஜேஸ்வரம் பிருகதீஸ்வரர் திருக்கோயில் (தஞ்சை பெரிய கோயில்) தஞ்சாவூர் தஞ்சை 1	சென்னை ராமேஸ்வரம் இருப்புப் பாதையில் உள்ள ரயில் நிலையம். நகரத்தின் பிரதான பகுதியில் கோயில்.

அமர்நாத் யாத்திரை

பனி லிங்கமாகக் காட்சி தரும் அமர்நாத் குகையில் பெருமானை தரிசிக்க உகந்த காலம் ஜுலை முதல் வாரத்திலிருந்து செப்டம்பர் 15 வரையாகும். ஸ்ரவண பௌர்ணமி விசேஷம் (ஜுலை-ஆகஸ்ட் மாதம்). இறைவன் பார்வதியினை மணந்து இறவாத் தன்மையினை விளக்கும் அமரகதையை இறைவிக்கு இத்தலத்தில் விளக்கியதாக ஐதீகம். இதை ஒட்டுக் கேட்டு புறாக்கள் சாகா வரம் பெற்றதாக வரலாறு. அப்புறாக்களைக் காண்பதால் நல்லன நடக்கும் என்றும் கூறுவர். 3962 அடி உயரத்தில் இரண்டடி நீளமும், 55 அடி அகலமும் மற்றும் 50 அடி ஆழமும் நிறைந்தது இக்குகை. பஹல்காமிலிருந்து அமர்நாத் 47 கிமீ. இது 4 நாட்கள் பிடிக்கும். பஹல்காம் ஸ்ரீ நகரிலிருந்து (காஷ்மீர்) 96 கிமீல் உள்ள சுற்றுலா மையம். பஹல்காமிலிருந்து சந்தன்வாரி, சேஷ்நாக், பஞ்ச்தரணி வழியாகச் செல்ல வேண்டும். இந்த 3 இடங்களிலும் இரவு தங்கி செல்ல வேண்டும். ஸ்ரீநகரிலிருந்து சோனாமார்க் (84 கிமீ) மார்க்கமாகவும் அமர்நாத்தை அடையலாம். பால்தாலிலிருந்து இத்தலத்தை அடைய 16 கிமீ மலையேற்றம். தற்போது பஹல்காமிலிருந்து (2130 மீ) சந்தன்வாரி (2895 மீ) வரை சாலை மார்க்கமாக ஜீப் மூலம். அடையலாம். இது 16 கிமீ. குதிரை சவாரியும் உள்ளது. சந்தன்வாரியிலிருந்து சேஷ்நாக் 11 கிமீ. சேஷ்நாக்கிலிருந்து (3574 மீ) பஞ்ச்தரணி 13 கிமீ மற்றும் பஞ்ச்தரணியிலிருந்து அமர்நாத் 7 கிமீ. இவை மூன்றும் குதிரையில் செல்ல வேண்டும்.

6	சாட்டியக்குடி வேதபுரீஸ்வரர் திருக்கோயில் சாட்டியக்குடி - கிள்ளுக்குடி அஞ்சல், வழி தேவூர் திருவாரூர் வட்டம் மற்றும் மாவட்டம் 611109	கீழ்வேளூரிலிருந்து (கீவளூர்) கச்சனம் வழியாக திருத்துறைப்பூண்டிக்குச் செல்லும் பாதையில் ஊர். திருவாரூர் - தேவூர் பாதையில், தேவூரை அடுத்து இந்த ஊர்.
7	திருமுகத்தலை பன்னத்தெரு பன்னகாபரணேஸ்வர சுவாமி திருக்கோயில் பன்னத்தெரு, மாராச்சேரி அஞ்சல் (வழி) பாமணி திருக்குவளை வட்டம் நாகை மாவட்டம் 614711	திருத்துறைப்பூண்டி நாகை-வேளாங்கன்னி பாதையில் 4 கிமீ தூரத்தில் கொக்காலடி என்னும் ஊரை அடைந்து, மாராச்சேரி பாதையில் (மானாச்சேரி) 3 கிமீல்

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
தஞ்சகன் ஆண்ட ஊர். முதலாம் இராஜராஜன் தன் 25 ஆண்டு ஆட்சி நிறைவைக்குறிக்கும் வகையில் கட்டிய கோயில். நிழல் விழாத கோபுரம், பெரிய ஆவுடையார், பெரிய நந்தி (ஒரே கல்) , 80 டன் இடையுள்ள பெரிய கல் தாங்கிய கோபுரம். இந்தக் கல்லில் ஒரு மாட்டு வண்டி சுற்றி வரும் அளவுக்கு இடம் உண்டு. சிவலிங்கத் தீர்த்தத்தில் நீர் குறைந்திருக்கும் போது பெருமான் தெரிவார். இது ஓர் வைப்புத் தலம். அஷ்ட பந்தனம் ஆவுடையாரையும் பாணத்தையும் இணைக்காமல் இளகவே கருவூர்த்தேவர் தன் வாயில் உள்ள தாம்பூலத்தை உமிழந்து மருந்தாக்கி சேர்த்ததாக வரலாறு. தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் பராமரிக்கப்படுகிறது. சாரப்பள்ளம் என்கிற ஊரிலிருந்து இக்கோயிலுக்கும் சாரம் கட்டப்பட்டதாம். முதல் தளத்தின் உட்சுவற்றில் உள்ள 108 கரணங்கள் பிரசித்தம். அருகே சரஸ்வதி மகால் என்னும் ஓலைச்சுவடி பாதுகாப்பு மையம் உள்ளது.	பிருகன்நாயகி உடனுறை பிருகதீஸ்வரர். 06.00 - 12.30 04.00 - 08.30 துணை ஆணையர், பொருளாளர்,மேல வீதி அரண்மனை கோயில் தேவஸ்தானம், இந்து அறநிலையத்துறை, தஞ்சை-1 04362-274476 கருவூர்த் தேவர் திருவிசைப்பா பாடல் பெற்ற தலம்.
ஏழிருக்கை என்று பெயர் பெற்ற ஊர். ஆறு ஆதாரங்களுக்கு மேல் ஏழாவது இடமான துவாதசாந்த இருக்கை பெற்ற ஊர். சாட்டிய (சாண்டில்ய) முனிவர் வழிபட்ட தலம். ஜாட்டியம் வெப்ப மிகுதியால் வரும் ஜுரம், ஜுரதேவதையாக இறைவனை வழிபட்ட தலம் ஜாட்டியக்குடியானது. வெப்ப நோயை நீக்கும் தலம். நான்காம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ஊர். மேற்கு பார்த்த சந்நிதி. தேவூர் தேவபுரீஸ்வரர் சுவாமி கோயில். குரு ஸ்தலம். குபேரன், குரு வணங்கிய தலம்.	வேதநாயகி உடனுறை வேதபுரீஸ்வரர் 06.00-12.00 04.00-08.00 எஸ். வெங்கடேச குருக்கள் 04366-276113, 9486278810 ஜி. தியாகராஜ குருக்கள் 94424 46077 கருவூர்த்தேவரின் திருவிசைப்பா பாடல் பெற்ற தலம். மாணிக்க வாசகர் பாடல் பெற்றது.
ஆதிசேடனுக்கு குஷ்டம் நீக்கிய தலம். மஹா கால பைரவர் தலம். நளன், தமயந்தி, ஸ்ரீ சனீஸ்வர பகவான் அனுக்கிரகம் பெற்ற தலம். எதிர்ப்பக்கம் சூர்ய தீர்த்தம். பண்டை காலத்தில் முகத்தலைலிங்கம் அமைந்த தலமாதலால் இப்பெயர். மதுரை ஆதீனக் கோயில்.	சாந்தநாயகி உடனுறை பன்னகாபரணேஸ்வரர் 06.00-12.00 04.00-08.00 ர.கௌரிசங்கரகுருக்கள், வே.ஆறுமுகம் மேலாளர் 04366-247490 04369-220983 (தி.து.பூண்டி)

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
		ஊர். மன்னார்குடியிலிருந்தும் வரலாம்.
8	கீழ்கோட்டூர் மணியம்பலநாதர் திருக்கோயில் கீழ்கோட்டூர் கோட்டூர் அஞ்சல் (வழி) திருத்துறைப்பூண்டி மன்னார்குடி வட்டம் திருவாரூர் மாவட்டம் 614708	திருத்துறைப்பூண்டி-மன்னார்குடி பாதையில் , திருப்புத்தூர் பாலம்தாண்டி 1 கிமீ தூரத்தில் மேலக் கோட்டூர் உள்ளது. இந்தக் கோயில் வளைவைத் தாண்டி உள்ளே சென்றால் கீழ்க் கோட்டூர் மணியம்பலம். பாதுகாப்பு நலன் கருதி கோயில் நேரம் மிகவும் நேர்த்தியாக கடைபிடிக்கப்படுகிறது. மன்னார்குடியிலிருந்து வரும்போது திருவண்டுதுறையை தரிசித்துவிட்டு பின் கோட்டூரைதரிசிக்கலாம்.
9	களந்தை ஆதித்தேச்சரம் களப்பால், கோயில் களப்பால் அழகியநாதசுவாமி திருக்கோயில் கோயில் களப்பால் நடுவக் களப்பால் அஞ்சல் (வழி) திருத்துறைப்பூண்டி திருவாரூர் வட்டம் 614710	மன்னார்குடியிலிருந்து வரும் போது திருப்பத்தூர் அடைந்து வலப்பக்கம் திரும்பி மீனம்பநல்லூர் வழி பிடித்து 9 கிமீ தூரம் சென்றால் ஊர். இதைத்தாண்டி திருக்களர் தலம் உள்ளது. அங்கிருந்து சங்கேந்தி பாதையும், திருத்துறைப் பூண்டி பாதையும் உள்ளது. இது 12 கிமீ தூரம். திருப்புத்தூர் வளைவில் இருந்து சுமார் 4 கிமீ திருக்களர்.
10	திருலோக்கி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் திருலோக்கி அஞ்சல் (வழி) துகிலி எஸ். ஓ திருவிடைமருதூர் வட்டம் தஞ்சை மாவட்டம் 609804	திருப்பனந்தாளிலிருந்து தென்கிழக்கில் 5 கிமீலும், துகிலியிலிருந்து வடமேற்கில் 5 கிமீ. திருமங்கலக்குடி, சூரியனார் கோயில் மற்றும் கஞ்சனூருக்கு அருகில் உள்ளது. அருகே ஸயன கோலத்தில் க்ஷீராப்தி சயன நாராயணப் பெருமாள் திருக்கோயிலும் உள்ளது.

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
கருவூர்த்தேவரின் திருவிசைப்பா பாடல் பெற்ற தலம்.	
பிரமன், ஐராவதம் வழிபட்ட தலம் மேலக்கோட்டூர் திருமுறைத்தலம். ஐராவதம் மேலக்கோட்டூரிலும் வழிபட்டது. அதன் மணி இங்கு விழுந்ததால் மணியம்பலமானது.	மணியம்பலநாயகி உடனுறை மணியம்பலநாதர். 05.00 - 11.30 05.00 - 08.30 மீனாட்சி சுந்தரம் குருக்கள்(மேலக்கோட்டூர்) 04367-279791 கருவூர்த்தேவர் பாடல் பெற்றது சங்கரநாராயணன் குருக்கள் 98435 82661
கூற்றுவ நாயனாருக்கு பாதமுடி சூட்டிய தலம். மாடக்கோவில்களில் ஒன்று திருக்களந்தை ஆதிச்சேஸ்வரம். களப்பாளர் கோத்திரத்தைச் சேர்ந்தவர் வாழ்ந்த ஊர். ஆதித்த சோழன் கட்டியதால் இப்பெயர். விரைவில் திருப்பணி நடக்க உள்ளது.	பண்ணேர் மொழியாள் உடனுறை அழகியநாதசுவாமி 09.00-10.00 04.00-07.00 கே.விஸ்வநாத குருக்கள் 93801 32719, 04367-277279 கருவூர்த்தேவர்திருவிசைப்பா பாடல் பெற்ற தலம்.
ராஜராஜசோழன் காலத்துக்கோயில். குருபகவானே ரிஷபாரூடரைக் கைகூப்பி தொழுது நிற்பதால் தடைபட்ட திருமணம், மக்கட்பேரும், மாங்கல்ய தோஷமும் நீங்கும் தலம். குரு மறைந்திருந்தாலோ பகை வீட்டில் இருந்தாலோ தோஷம் நீங்கும் தலம். குரு பகவானின் பாவம் நீங்க திருவிடைமருதூரின் ஈசான்யத்தில் உள்ள திரை லோக்கிய சுந்தரனை வழிபட சிவன் பணித்த தலம். அவ்வாறே பாபம் நீங்கி இறைவியை ஆலிங்கனம் செய்து தேவர் புடை சூழ ரிஷபாரூடனாக காட்சி தரும் அதிசயத்தலம். எரிந்த மன்மதனைஇங்கு வந்து வணங்கப் பணித்து மீண்டும் உயிர்பித்து ரதிக்குக் கொடுத்ததாக வரலாறு. ஆதலால் மாங்கல்ய தோஷ நிவர்த்தித்தலம். இதே போல் திருச்சி அருகே உள்ள லால்குடிக்கு சமீபத்தில் பூவாளூர் தலத்திலும் இதே தலக்குறிப்பு உள்ளது. சுகேதுவுக்கு தீராத தலைவலி நீக்கிய தலம்.	அகிலாண்டேஸ்வரி உடனுறை சுந்தரேஸ்வரர் 07.30-12.30 04.00-08.00 ஆலால சுந்தரர்(சுந்தரேஸ) சிவாச்சாரியார் 9360769884 94429 32145 கருவூர்த்தேவர் பாடிய திருவிசைப்பா பாடல் பெற்ற தலம். பிரகஸ்பதி, கருவூர்த்தேவர், பிருகு, சுகேது, தருமன் வணங்கிய தலம்.

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
	ஜோதிர்லிங்கங்கள்- 12	
1	சௌராஷ்ட்ரம் (சோமநாத்) ஸ்ரீசோமநாதீஸ்வரர் தேவஸ்தானம் விராவல் குஜராத்	சென்னை -அஹமதாபாத் நவ்ஜீவன் எக்ஸ்ப்ரஸ் 2 நாள் பகல் மற்றும் 1 நாள் இரவுப் பயணம். அஹமதாபாத்தில் இருந்து ராஜ்கோட் மார்க்கத்தில் சென்றால் விராவல் ரயில் நிலையம். (500 கிமீ) அங்கிருந்து 5 கிமீ தூரத்தில் உள்ள தலம் இது. ராஜ்கோட்-விராவல் 186 கிமீ.

ஜோதிர்லிங்க ஶ்லோகம்

சௌராஷ்ட்ரே சோமனாதம்ஞ்ச ஸ்ரீஶைலே மல்லிகார்ஜுனம்
உஜ்ஜெய்ன்யாம் மஹாகாளம் ஓம்காராம் அமலேஸ்வரம்
ப்ரஜ்வல்யாம் வைத்யநாதாஞ்ச டாகின்யாம் பீமாஶங்கரம்
ஸேது பந்தேது ராமேஶம் நாகேஷம் தாருகாவனே
வாரணாஸ்யாந்து விஶ்வேஶம் த்ரயம்பகம் கௌதமீதே
ஹிமாலயேது கேதாரம் க்ருஶ்ணேஶம்ஞ்ச விஶாளகே

2	ஸ்ரீ சைலம் ஸ்ரீ மல்லிகார்ஜுனேஸ்வர ஸ்வாமி தேவஸ்தானம் ஸ்ரீ சைலம் கர்னூல் மாவட்டம் 518100 ஆந்திரப் ப்ரதேசம்	நந்தியாலிலிருந்து 117 கிமீ. ஹைதராபாத்திலிருந்து 6 மணி நேர பஸ் பயணம். தெனாலியிலிருந்து 250 கிமீ. தெனாலி சென்னை விஜயவாடா நெடுஞ்சாலையில் விஜயவாடாவிற்கு 27 கிமீ முன்னதாக உள்ளது. குண்டூர் விஜயவாடாவிலிருந்து 33 கிமீ. இங்கிருந்தும் செல்லலாம். மலை மேல் கோவில். 50 கிமீ மலைப்பாதைப் பேருந்துப் பயணம்.

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
கடற்கரையில் அமைந்துள்ள ஊர். பிரபாஸபட்டணம் எனப்பெயர். அருகே திரிவேணியில் கபில மற்றும் ஹிரண்ய நதிகள் சங்கமம். அந்தர் வாஹினியாக சரஸ்வதி, வ்ரஜனி மற்றும் நெங்கு நதிகள் சங்கமம். சோமநாதம் கஜினி முகமது படையெடுப்பில் தாக்குண்ட கோயில். இந்த 3 அடி லிங்கம் பிற்காலத்தில் மாற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. கிருஷ்ணன் வேடனால் அம்பிடப்பட்டு கொல்லப்பட்ட இடம் உள்ளது. சுமார் அரை கிமீ தூரத்தில் சொர்க்காரோஹனத்தின் அருகில் குகையில் பாம்பின் சிலை உள்ளது. ஆதிசேஷன் பலராமராகப் பிறந்து சரீரத்தைத் துறந்த இடம். பீமேஸ்வரர் (சுயம்பு) , சிவன் அகல்யாபாய் கோவில்களும் மற்றும் அருகில் தப்தோத்க சுவாமி நாராயணர், சித்தேஸ்வரம் ஆகியவை உள்ளன. எதிரே அரச மரத்தின் கீழ் பாண லிங்கம், 5 முகங்களுடன் சோமநாத சிவலிங்கமும் சுரங்கக் கோவிலில் உள்ளன. கிழக்கே காளீஸ்வரர் சிவலிங்கமும் அகல்யாபாயி நிறுவிய சிவலிங்கம் மேல்தட்டிலும் உள்ளது.	ஸ்ரீ சோமநாதீஸ்வரர் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை இடைவிடாது தரிசனம். தங்கும் வசதிக்கு ஸ்ரீ சோம்நாத் ட்ரஸ்ட்சோம்நாத் ப்ரபாஸ்பதன் 362 268 ஜுனாகட் மாவட்டம் 02876 - 231212 திலீப் சாவ்தா 94282 14901 02876-231200 98242 85667
சக்தி பீடத்தில் பிரமராம்பாள் பீடம். கழுத்து பாகம் விழுந்த இடம் (மாதவி பீடம்) அர்ச்சுனன் தலங்களில் ஒன்று(மருத மரம்). மற்ற இடங்கள் திருவிடைமருதூர் திருப்புடைமருதூர் (அம்பாசமுத்திரம் அருகில்) சிலாத முனிவர் தவம் செய்தது. சிவனைச் சுமக்கும் ஆற்றலை நந்தி பெற்ற இடம். அவரே இங்கு மலையாக இருக்கிறார். 3 பாடல் பெற்ற ஜோதிர்லிங்கங்களில் ஒன்று. மற்றவை இராமேஸ்வரம், திருக்கேதாரம். சம்பந்தரும், சுந்தரரும் காளத்தியைத் தொழுத பின்னர் அங்கிருந்தே வடக்கு நோக்கி பாடினர். அப்பர் கயிலாய யாத்திரையில் எழுந்தருளிப் பாடினார். கிருஷ்ணா நதிக்கரையில் உள்ளது. இதுவே பாதாள கங்கை. 8 சிகரங்கள் உள்ளன. 9 கோயில்களும் உள்ளன. அருணாசுரனை வண்டு	ஸ்ரீ மல்லிகார்ஜுனேஸ்வர ஸ்வாமி ஸ்ரீ ப்ரமராம்பிகை காலை 5 முதல் இரவு 10 மணி வரை தரிசனம். நிர்வாக அதிகாரி, துணை ஆணையர் அலுவலகம் 08524 - 287130 ரூம் புக்கிங் 08524 -287135 நிர்வாகம் 08524-287159

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
	மகா நந்தி நந்தியால் 518502	நந்தியால் ஊர் நந்தியின் பெயரில் திகழ்கிறது. நவ நந்தி க்ஷேத்திரத்தில் இவ்வூரைச் சுற்றி 9 கோவில்கள் உள்ளன.
3	த்ரயம்பகேஷ்வர் ஸ்ரீ த்ரயம்பகேஷ்வர் தேவஸ்தானம் நாஸிக் வழி த்ரயம்பகேஷ்வர் நாஸிக் மாவட்டம் 422 212 மஹராஷ்ட்ரம்	மும்பாய் - ஷீரடி மார்க்கத்தில் உள்ள ஊர் நாசிக். நாசிக்கிலிருந்து 29 கிமீ தூரத்தில் உள்ளது த்ரியம்பகேஷ்வர். பூனாவிலிருந்து நாசிக் சுமார் 200 கிமீ தூரம். 5 மணி நேர பேருந்துப் பயணம். நாசிக்கிலிருந்து தனிப் பேருந்தில் த்ரயம்பகேஸ்வர் செல்ல வேண்டும். நாஸிக் ரோடு இரயில் நிலையத்திலிருந்தும் வரலாம்.ராமர் வனவாசம் செய்த பஞ்சவடி க்ஷேத்திரமும் நாசிக்கிற்கு அருகில் உள்ளது.
4	உஜ்ஜயினி (அவந்திகா) ஸ்ரீ மஹாகாளேஸ்வரர் திருக்கோயில் உஜ்ஜயினி 456001 மத்தியப் பிரதேசம்	போபாலிற்கு மேற்கே 185 கிமீ. போபால் சென்னை புது டெல்லி ரயில் மார்க்கத்தில் உள்ள ஊர். சென்னையிலிருந்து 1701 கிமீ.

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
வடிவம் கொண்டு அழித்தமையால் அம்பாளுக்கு இப்பெயர். (பிரமரம் -வண்டு). கிருஷ்ணா நதி பாதாள கங்கை கோவிலிலிருந்து 3 கிமீ. மருத மரவிருக்ஷத்தின் அருகில் ஸஹஸ்ர லிங்கமும், கணபதி புல்லாங்குழல் வாசிக்கும் வடிவிலும் வழியில் சாட்சி விநாயகரும் பார்க்க வேண்டியவை.	
கோதாவரியின் உற்பத்தி ஸ்தானம். மலையில் 721 படிகளின் மேல் ஓர் நந்தியின் வாயிலிருந்து சிறிய துளிகளாக விழுந்து தேங்கி மலையில் நதியாக பெருக்கெடுக்கிறது. கோதாவரி அம்மன் தெய்வமும் உள்ளது. கௌதமர் ஆஸ்ரம குகை, கோரக்நாத் குகை, இறங்கும் வழியில் ராம மற்றும் லக்ஷ்மண குண்டம், கௌதம குண்டம் உள்ளன. சுற்றிலும் சிவலிங்கங்கள் உள்ளதால் குளத்தின் பெயர் கோடி தீர்த்தம். மேற்கில் பள்ளி கொண்ட பெருமாளின் திருவடியில் நீர் துளசி மணத்துடன் உள்ளது. பிரம்மா, விஷ்ணு சிவனின் அம்சமாக மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளதால் த்ரியம்பகம். (முக்கண்). தொட்டு பூஜை செய்யக்கூடிய சிவலிங்கத்தின் அடியில் நீர் ஊற்று.எண்ணற்ற மூர்த்தங்கள் உள்ள கோயில். அருகே உள்ள வாங்கானேரிலிருந்து 1 கிமீல் ரத்தன் குன்றில் பூர்ணா தேவியும், நீல பர்வதத்தில் தத்தாத்ரேயர் மற்றும் கால பைரவர் கோயில்களும், நீலாம்பிகைக்கோயில்களும் உள்ளன.	ஸ்ரீ த்ரயம்பகேஷ்வர் காலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை இடைவிடாது தரிசனம். சீஃப் எக்ஸிக்யூடிவ் ஆபிசர் ஜில்லா பரிஷத் 0253-2596957
முக்தி தரும் க்ஷேத்திரம் ஏழில் ஒன்று (அவந்திகா). பூமிக்கு அடியில் குகைக்குள் மகாகாளேஸ்வரர். மேல்தட்டில் ஓங்காரேஸ்வரர். 3வது தட்டில் தாரகேஸ்வரர். 12 ஆண்டுக்கு ஒரு முறை கும்ப மேளா வைபவம் நடைபெறுகிறது. சிதாபஸ்மம் என்னும் மயானச் சாம்பல் இறைவனுக்குச் சாற்றப்படுகிறது. சக்தி பீடத்தில் முழங்கை விழுந்த இடம். ஆதி சங்கரர் ஸ்ரீ சக்ரம் பிரதிஷ்டை	ஸ்ரீ மஹாகாளேஸ்வரர் ஸ்ரீ உஜ்ஜயினிகாளி (மஹாகாளி) காலை 03.00 மணி முதல் இரவு 10.30 வரை. டெம்பிள் அட்மினிஸ்ட்ரேர் 0734 - 2557725,

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி

ஜோதிர்லிங்கங்கள்

ஹிமாலயப் பள்ளத்தாக்கில் உள்ள சக்தி பீடம் ஜ்வாலாமுகி என்பது. இங்கு தொடர்ந்து நெருப்பு எரிந்து ஒளிவீசுகிறது. அதேபோல் பரமசிவன் 12 தலங்களில் ஜோதி வடிவமாக விளங்கி அருள் பாலிக்கிறார். இந்த சூக்ஷம ஒளியினாலும் ஒளி வட்டத்தினாலும் பக்தர்களுக்கு அவன் இரண்டில் கடற்கரையிலும், மூன்றில் நதிக்கரையிலும், நான்கில் மலைகளிலும் ஏனைய மூன்றில் சமவெளியிலும் அருள்கிறார்.

சூரியனாகவும், நெருப்பாகவும், ஒளியாகவும் அக்னி வடிவமாக விளங்குவதாலும் ஜோதிர்லிங்கத்தின் புனிதத்தை தன்னுள் அடக்கியுள்ளதாலும் மஹாதேவன் என்கிற பெயர் பெற்ற சிவபெருமான் ருத்ர தாண்டவம் ஆடிய போது விழுந்த ஒளிப்பிழம்புகளே இந்தத் தலங்கள். அறியாமை என்னும் இருளைப்போக்கி நன்மை, வாழ்வில் மங்களம், நல் ஆரோக்கியம், தன தான்ய அபிவிருத்தி, சத்ரு நாசம் செய்து எல்லா வளமும் பெற்று நீடூழி வாழ அருளும் தலங்கள் இவை.

5	ஓங்காரேஸ்வரர் (அமலேஸ்வரர்) ஸ்ரீ ஓங்காரேஸ்வரர் தேவஸ்தானம் மத்தியப் பிரதேசம்	ஓங்காரம் உஜ்ஜயினிலிருந்து தெற்கே கண்ட்வா வழியில் 80 கிமீ. ஓங்காரம் ரோடு ரயில் நிலையத்திலிருந்து 11 கிமீல் கோயில்.
6	பீமாசங்கர் ஸ்ரீ பீமாசங்கர் தேவஸ்தானம் அம்பேகாவூன் தாலுக்கா பூனா மாவட்டம் 410509 மஹாராஷ்ட்ரம்	சென்னை மும்பை ரயில் மார்க்கத்தில் உள்ள பூனாவிலிருந்து சுமார் 128 கிமீ. பூனாவிலிருந்து லோனாவாலா

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
செய்த சிப்ரா நதிக்கதையில் உள்ள இடம். விக்ரமாதித்தன் ஆண்ட ஊர். அவனது பழைய கோட்டையும் பாழடைந்து உள்ளது. அவனுடைய குல தெய்வமான ஹரசித்திமாதா கோயிலும் உள்ளது. மூடனாக இருந்த காளிதாஸனுக்கு அருளிய காளியும் இவளே. அருகே மங்களேஸ்வரம் மற்றும் த்ரிவேணி ஆகிய இடங்கள் உள்ளன. சுமார் 30 கிமீ தூரத்தில் பைரவ் காட்டிலும் ஆலயங்கள் உள்ளன. துவாபர யுகத்தில் ஸாந்தீபினி முனிவரிடம் இங்கு கிருஷ்ணன், பலராமன், குசேலன் ஆகியோர் பாடம் கற்றதாக வரலாறு.குவாலியர் ராஜாவால் கட்டப்பட்ட கிருஷ்ணன் கோயிலும் உள்ளது. 29 கிமீல் சாஞ்சி ராமநாதர் மற்றும் கண்ணன் நாராயணன் நாச்சியார் கோவில்.	2515844, 2550444, 09425093142 0734-2550563, 98270 85676
நர்மதை நதிக்கரையில் உள்ள தலம். ஓம் என்கிற பிரணவத்தின் வடிவில் நதி பாய்வதால் இப்பெயர். பள்ளத்தில் சிவபெருமான் இருக்கிறார். கோவிலைச் சுற்றும் போது மேல் தட்டில் மஹாகாளர் உள்ளார். எதிர் மண்டபத்தில் ராமனின் மூதாதையர் மாந்தாதாலிங்கம் உள்ளது. அசுரர்களை அழிப்பதற்காக இறைவன் பாதாள உலகத்தில் இருந்து வெளிப்பட்டதாக ஐதீகம். பிரம்ம-விஷ்ணு-ருத்ரபுரி அடங்கியதால் த்ரிபுரி எனப் பெயர். சுவாமி உள்ளது ருத்ரபுரியில். காவேரி நர்மதா சங்கமத்தில் உறையும் இறைவன் என இவரை ஆதிசங்கரர் குறிப்பிடுகிறார். நர்மதையின் தென் கரையில் அமலேஸ்வரம் மற்றும் பஞ்சமுக கணபதியும், இந்திரேஸ்வரமும் பார்க்க வேண்டிய கோவில்கள்	ஓங்காரேஸ்வரர் முழு நேரமும் இடைவிடாது தரிசனம்.
பூமியின் சமதளம் மேலே உள்ளதால் திருக்கோயில் படிகளில் இறங்கி சென்று வழிபடும்படியாக உள்ளது. மஹாராஷ்ட்ராவில் உள்ள 5 ஜோதிர் லிங்கங்களில் ஒன்று.	ஸ்ரீ பீமாசங்கர் காலை 4.30 முதல் இரவு 9.30 வரை இடைவிடாது தரிசனம். திங்கள்,

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
		60கிமீ. லோனாவாலாவிலிருந்து 215 கிமீ.
7	க்ருஷ்ணேஸ்வர் ஸ்ரீ க்ருஷ்ணேஸ்வர் தேவஸ்தானம் எல்லோரா குகை அருகில் வழி தவுலதாபாத் ஔரங்காபாத் மாவட்டம் 431002 மஹராஷ்ட்ரம்	பம்பாயிலிருந்து மன்மாட் 251 கிமீ. ஔரங்காபாத் அங்கிருந்து 113 கிமீ. பர்பானி (மும்பாய் செகந்திராபாத் ரயில் பாதையில் உள்ள ரயில் நிலையம்) ரயில் நிலையத்திலிருந்து சுமார் 120 கிமீ. எல்லோரா குகைகள் ஔரங்காபாத்திலிருந்து சுமார் 5 கிமீ. இதற்கு அருகில் உள்ள தலம். தவுலதாபாத்திலிருந்து 11 கிமீ தூரம்

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
ஸஹ்யாத்ரி மலைத்தொடரில் உள்ள பீமா நதிக்கரையில் அமைந்த ஊர். இந்த நதி தொடங்குவதும் இங்கேதான். த்ரிபுராசுரனை அழித்த போது சிவபெருமான் களைப்பு நீங்க அமர்ந்த போது வெளிப்பட்ட வேர்வையே இந்த நதியாக ஓடுகிறது. சந்த்ரபாகா என பந்தர்பூரில் ஓடும் நதியே இது. கும்பகர்ணனின் மகன் பீமனுக்கும் சிவபெருமானின் பக்தன் காமரூபனுக்கும் இடையே நடந்த வாக்கு வாதத்தில் தன்னை வணங்கச்சொன்ன போது காமரூபன் எதிர்க்க சிவனையை தாக்க முற்பட்டான் பீமன். பெருமான் வெளிப்பட்டு அவனை அழித்து தேவர்களைக் காத்தான். இந்த லிங்கமாக சுயம்புவாக வெளிப்பட்டார்.	பிரதோஷம், மஹாசிவராத்ரி, அமாவாசை, கிரகண நாட்களில், கார்த்திகை மற்றும் ஶ்ரவண மாதத்தில் ஶ்ருங்கார் தரிசனம் மாலை 03.30 - 07.30 இல்லை. ஶ்ரவண மாதத்தில் இரவு 11.30 வரை நடை திறந்திருக்கும்.
மஹாராஷ்ட்ரத்தில் உள்ள மற்றோர் ஜோதிர்லிங்கம். வேருள், ஷிவாலய் மற்றும் க்ருஷ்ணேஷ்வர் என்கிற மூன்று தலங்களோடு இணைந்த கதைக்குறிப்பு கொண்ட ஊர். நாகர்கள் வாழ்ந்த பகுதியில் மன்னன் ஒருவன் முனிவர்கள்மற்றும் ரிஷிகளின் மிருகங்களைக் கொன்றதால் சாபம் பெற்று பின்னர் பூச்சிகளால் தாக்கப்பட்டு வியாதியுற்றவன், தாகம் கொண்டு அலைய, குதிரைக் குளம்பில் தேங்கிய நீரைப் பருகி நற்கதி அடைந்தான். அந்த மன்னனின் பெயரே பேருள். பிற்காலத்தில் அதே இடத்தில் உண்டான பிரம்ம சரோவரமே ஷிவாலய் ஆனது. முன்பு ஒரு சமயம் பார்வதி மஞ்சள் மற்றும் குங்குமத்தை கட்டை விரலால் இணைத்துக் கலந்து இடக்கையில் வைத்து தலையில் பூசிக்கொள்ள எத்தணிக்க ஓர் லிங்கம் கையில் தோன்றி பின் ஒளியாய் மாறியது. சிவன் இதனைக் கண்டு அந்த லிங்கம் பாதாள உலகத்தில் இருந்த லிங்கமே எனக்கூறி தன் திரிசூலத்தால் வெளிக் கொணர்ந்தார். பார்வதியின் கட்டை விரலால் உருவானதால் க்ருஷ்ணேஷ்வர். (க்ருஷ்ண என்றால்	ஸ்ரீ க்ருஷ்ணேஷ்வர் காலை 05.30 முதல் இரவு 09.30 மணி வரை இடைவிடாது தரிசனம். ஶ்ராவண சமயத்தில் (ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் காலை 3 முதல் இரவு 11 மணி வரை.

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
8	இராமேஸ்வரம் ஸ்ரீ இராமநாதசுவாமி திருக்கோயில் இராமேஸ்வரம் 623526 இராமநாதபுரம் மாவட்டம் தமிழ்நாடு	சென்னை எழும்பூரிலிருந்து இராமேஸ்வரம் வரை செல்லும் நேரடி ரயில் உள்ளது. 700 கிமீ தூரம். இராமநாதபுரத்திலிருந்து சுமார் 55 கிமீ.

திருத்தல யாத்திரை செய்யும் சிவனடியார்களின் கவனத்திற்கு

